# கீதாசார்யன் 518

**कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन**



**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்**

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி
தாழ்வாதுமில் குரவர் தாம் வாழி – ஏழ்பாரும்
உய்ய அவர்கள் உரைத்தவைகள்தாம் வாழி
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

ஆண்டு 44 | நம்மாழ்வார் ஆண்டு 5121 பிலவ கார்த்திகை (நவம்பர் 2021) | இதழ் 2

## திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயர் ஸ்வாமியின் பரமபரப்ராப்தி

திவ்யப்பிரபந்தம் முதல் முதலில் அவதரித்த திருக்கோவலூர் திவ்யதேசத்தின் பரம்பரை நிர்வாஹகரும், பல்லாயிரக்கணக்கான ஸ்ரீவைஷ்ணவர்களை சிஷ்ய ஸம்பத்தாக உடையவரும், தமிழகத்தின் பல மாவட்டங்களில் ஸ்ரீவைஷ்ணவம் தழைத்தோங்கச் செய்வதற்கு அரிய பெரிய பணிகளை ஆற்றி வந்தவருமான திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயர் ஸ்ரீ உ.வே. ஸ்ரீநிவாஸ ராமானுஜாசாரியர் ஸ்வாமி, 9–11–2021 அன்று தம்முடைய 62ம் திருக்ஷத்ரத்தில் ஆசார்யன் திருவடி அடைந்துவிட்டார் என்பது நமக்கு மிக மிக வருத்தத்திற்குரியது.

ஹிந்து மதத்திற்குப் பல்வேறு இன்னல்கள் விளைவிக்கப்பட்ட மாவட்டங்களிலெல்லாம் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்லாயிரக்கணக்கானவர்களைத் திருத்திப் பணிகொண்டு திருமகள் கேள்வனுக்காக்கி, பஞ்சஸம்ஸ்காரங்கள் செய்து அவர் ஆற்றியுள்ள பணிகள் கணக்கிலடங்கா. மிகப்பெரிய தேவஸ்தானமான திருக்கோவலூரையும் மிகச் சிறந்த முறையில் நிர்வகித்து மற்றவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

ஸ்ரீஸ்வாமி தமது மூத்த திருக்குமாரர் ஸ்ரீ உ.வே. கோலாஹலன் ஸ்வாமியை ஸம்ப்ரதாய உபந்யாஸகராகத் திகழும்படியும், இளைய திருக்குமாரர் ஸ்ரீமணிவண்ணன் ஸ்வாமியை சிறு வயதிலேயே வெளியூர்களுக்கு அனுப்பித் தகுந்த ஆசிரியர்களுடன் தங்கியிருந்து வாசித்து, ந்யாய மீமாம்ஸா சாஸ்த்ரங்களிலும், ஸம்ப்ரதாயத்திலும் மிகவும் வல்லவராகத் திகழும்படி உருவாக்கியுள்ளமை வருங்காலத்திற்காக அவர் ஆற்றியுள்ள மிகச் சிறந்த பணியாகும். அக்குமாரர்களே அவருடைய பிரிவை ஈடுசெய்வார்களென்று ஆறுதல் அடைவோமாக.

## கீதாசார்யன் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | வைணவ ஆசார்யர்களின் வாழ்வும் வாக்கும் | ரூ. 600 |
| 2. | இயற்பா வியாக்கியானம் (நம்பிள்ளைபடி) | ரூ. 400 |
| 3. | ரகசியக்ரந்தங்கள் மூலம் | ரூ. 125 |
| 4. | ஸ்ரீவைஷ்ணவ முத்துக்கள் (முதல் பகுதி) | ரூ. 200 |
| 5. | ஸ்ரீவைஷ்ணவ முத்துக்கள் (இரண்டாம் பகுதி) | ரூ. 200 |
| 6. | வெண்ணெய்க்காடும் பிள்ளை | ரூ. 100 |
| 7. | ஸ்ரீமத்பகவத்கீதை (தெளிவுரை) | ரூ. 100 |
| 8. | ஸ்ரீவைஷ்ணவகுருபரம்பரை | ரூ. 100 |
| 9. | ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமஸ்தோத்ரம் (மும்மதவிளக்கம்) | ரூ. 500 |
| 10. | ஆழ்வார்கள் யாவர்? | ரூ. 100 |
| 11. | கத்யத்ரயம், நித்யம் (தமிழ் மொழிபெயர்ப்புடன்) | ரூ. 100 |

மேற்கண்ட புத்தகங்கள் அனைத்தையும் சேர்த்து வாங்குபவர்களுக்கு ரூ. 2000க்கு இப்புத்தகங்கள் வழங்கப்பெறும் (தபால் செலவு தனி).

**கீதாசார்யன்** பத்திரிகைக்குத் செலுத்தியுள்ள சந்தா முடிவடைந்த உடன், சந்தா முடிவடைவது பற்றித் தனித் தபாலில் தெரிவிக்கப்படும். உடனடியாகச் சந்தா செலுத்திப் புதுப்பித்துக் கொள்ளாதவர்களுக்கு அடுத்த இதழ் அனுப்பப்படமாட்டாது. சந்தா செலுத்துபவர்கள் பின்கண்ட வங்கியின் (எந்த ஊரிலும்) எந்தக் கிளையிலும் கீதாசார்யன் சந்தா செலுத்தலாம்:

**Account in the Name of GEETHACHARYAN**

**Punjab National Bank A/c No. 0346002100022891 IFSC : PUNB0034600**

மேற்கண்ட வங்கிகளில் சந்தா செலுத்திய விவரத்தை, கீதாசார்யன் அலுவலகத்திற்குத் தொலைபேசி மூலமாகவோ, SMS, கடிதம், geethacharyan@yahoo.com க்கு E-mail மூலமாகவோ தெரிவிக்க வேண்டும். தொலைபேசி எண் : **9444911192** (காலை 10 மணிமுதல் இரவு 8 மணி வரை மட்டும். ஞாயிற்றுக் கிழமை விடுமுறை.) மணியார்டர்/டி.டி./ உள்ளூர் காசோலைகள் மூலமும் சந்தா செலுத்தலாம்.


## கீதாசார்யன்

**E-mail: geethacharyan@yahoo.com**

ஆலோசகர் குழுத் தலைவர்

**T.C.A. ராமானுஜம்** M.A.B.L. I.R.S (Retd.)

ஆசிரியர்

**Dr. M.A.வேங்கடகிருஷ்ணன்** M.A., M.Phil., Ph.D., D.Litt.

துணை ஆசிரியர்

**M.A. மதுசூதனன்** (M.C.A.,M.A(Skt.),M.A(Vaishnavism)



## கீதாசார்யன்

**7, தெற்கு மாடவீதி, திருவல்லிக்கேணி,**

**சென்னை 600005**

**மூன்று வருடச் சந்தா ரூ. 500**

**ஆயுள் சந்தா ரூ. 2500**

# அண்ணா ஸ்வாமி உபந்யாஸமாலை

*ஸ்ரீமதுபயவேதாந்த மஹாவித்வான் காஞ்சீ பிரதிவாதி பயங்கரம்*

## அண்ணங்கராசார்ய ஸ்வாமி

### பெருஞ்செல்வம் நெருப்பாக

தொண்டாடிப்பொடியாழ்வர் திருமாலையில் ''தவத்துளார் தம்மிலல்லேன் தனம் படைத்தாரிலல்லேன்'' என்றொரு பாசுரம் பாடியுள்ளார். 'யான் ஒரு தவமும் இயற்றினேனல்லேன்' என்று முன்னம் கூறினது தகும். உடனே, தனமும் யான் சம்பாதிக்கவில்லை யென்று மிக்க மனக் குறையுடன் கூறுகின்றாரே! இது தகுமா? 'கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பாக' என்று நம்மாழ்வாரருளிச் செய்கிறார். அர்த்தகாமங்களை வெறுத்துத் தள்ளி ஆழ்வார்கள் கோஷ்டியிலே சேர்ந்த பின்பும் ''தனம் படைத்தாரில்ல்லேன்'' என்று கூறினால் இவருக்கு வைராக்யமில்லை யென்றுதானே சொல்லவேணும் என்று சிலர் சங்கிப்பதுண்டு. இதைப் பற்றித் தெளிவு பிறப்பிக்க வேண்டியது அவசியமாகிறது.



தருமம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்று புருஷார்த்தங்கள் நான்காகச் சொல்லப் படுகின்றன சாஸ்த்ரங்களில். ''மன்னுமறம் பொருளின்பம் வீடென்றுலகில் நன்னெறி மேம்பட்டன நான்கறே" என்பது பெரிய திருமடல். "சேமநல்வீடும் பொருளும் தருமமும் சீரிய நற்காமமுமென்றிவை நான்கென்பர்'' என்பது இராமாநுச நூற்றந்தாதி. தர்மார்த்தகாம மோக்ஷங்கள் நான்கும் புருஷார்த்தங்களே. தர்மம் மோக்ஷம் என்னு மிவ்விரண்டைப்பற்றி யார்க்கும் விசாரமிராது. அர்த்தம் காமம் என்னுமிவை புருஷார்த்தமென்றால் இதைப் பற்றியே விசாரம் பெரிதுமுண்டாகக் கூடும். ஒரு விசாரமும் வேண்டா. தருமத்தைச் சொன்னவுடனே அர்த்தம் செர்ல்லப்பட்டிருக்கின்றது. மோர்க்ஷத்திற்கு முந்துற காமம் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் தர்மோபயோகியான அர்த்தம், த்ரவ்யம் உத்தேச்யமென்றும் மோக்ஷோபயோகியான காமம் உத்தேச்யமென்றும் தேறும்.

தர்மத்தைப்பற்றிச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு அர்த்தத்தைப் பற்றிச் சிறிது விரிவாகச் சொல்ல விரும்புகிறோம். காமமாவது ஆசை. ஆசை த்யாஜ்யமெனினும் எல்லாவிதமான ஆசையும் த்யாஜ்யமாகாது. அப்ராப்த விஷயங் களில் ஆசையே த்யாஜ்யமாகும். ப்ராப்த விஷயங்களில் ஆசை பரமோத்தேச்யமாகும். ஸ்ரீவைகுண்டகத்யத்தில் ''கதாஹம் பகவந்தம் நாராயணம் .....இதி பகவத் பரிசர்யாயாம் ஆசாம் வர்த்தயித்வா'' என்று ஸ்வாமி யருளிச் செய்கிறார். இவ்வாசையை க்ஷணகந்தோறும் அபிவிருத்தி செய்துகொண்டே யிருக்கவேணும். இல்லையாகில் மோக்ஷம் ரஸிக்கமாட்டாது. பசியில்லாதவனுக்கு போஜனம் ரஸியாதாப்போலே இவ்வாசை யில்லாதவர்க்கு

மோக்ஷம் ரஸிக்கமாட்டாதாகையாலே இதுதான் காமமெனப்பட்டு, புருஷார்த்தமெனவும் பட்டது.

இனி அர்த்தத்தைப் பற்றிப் பேசுகிறோம். அர்த்தமாவது தனம். தனத்தை, துர்விநியோகப் படுத்தி அநர்த்தத்தை விளைத்துக் கொள்பவர்கள் பலருளர். பகவதாலயங்களை இடிக்கவும், பாகவதர்களை வதை செய்யவும் பொருளீட்டுவாரும் பொருள் செலவு செய்வாரும் பலருளர், அவவழிகளிலே உபயோகப்படுகிற பொருள் தயாஜ்யமேயாகும். "ஜிதபாஹ்யஜிநாதி மணிப்ரதிமா அபி வைதிகயந்நிவ ரங்கபுரே மணிமண்டபவப்ரகணநாந் விதேதே பரகாலகவி:" என்று பட்டரருளிச் செய்தபடி திருமங்கையாழ்வார் கையில் கிடைத்த அளவு கடந்த பொருள் பகவத் கைங்கரியத்திற்கு விநியோகப்பட்டது. அப்படியே பாகவத ததீயாராதநாதிகளுக்கும் அபரிமிதமாக விநியோகப்பட்டது. "நரபதிபரிக்லுப்தம் சுல்கமாதாதுகாம:" என்றும் "வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்" என்றும் சொல்லுகிறபடியே பெரியாழ்வார் பாண்டிய ராஜஸதஸ்ஸில் பெற்ற அபரிமிதமான தனராசியைக்கொண்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் கோபுரப்ராகாராதி நிர்மாணம் செய்வித்தருளினதாக சரித்திரம் வாசிக்கிறோம்.

உபநிஷத்துக்களிலும், ஜாநச்ருதி முதலானவர்கள் ரைக்வர் முதலான ஆசார்யர்களுக்கு அபரிமிதமாகப் பொருள் ஸமர்ப்பித்து ப்ரஹ்மவித்யைகளை அதிகரித்ததாக ஓதப்பட்டிருக்கிறது. "ஆசார்யாய ப்ரியம் தநமாஹ்ருத்ய ப்ரஜாதந்தும் மா வ்யவச்சேத்ஸீ:" என்று தைத்திரீயோபநிஷத்தும் ஓதுகிறது. ஆக, ஸத்விஷயங்களில் விநியோகப் படக்கூடியதான தனம் த்யாஜ்யமன்று என்றும் உபாதேயமே யென்றும் விளங்கிற்று. தொண்டரடிப் பொடியாழ்வார், தமக்கு முன்னே தோன்றினவராய் தம்மைப்போலே புஷ்பகைங்கர்யத்திலே யீடுபட்டிருந்தவரான பெரியாழ்வார் கிழியறுத்துக் கொணர்ந்த தனராசிககாக் கொண்டு செய்த தொண்டுகளை நன்றாக அறிந்தவர். திருமங்கையாழ்வார் இவர்க்குப் பிற்பட்டவரானாலும் அவருடைய சரித்திரங்களையும் இவர் ஒருவாறு கேள்விப்பட்டிருக்கக் கூடும். அவருடைய தொண்டுகளையும் அறிந்திருக்கக்கூடும். அவ்விதமான தொண்டுகள் செய்வதற்கு தனம் இன்றியமையாததாதலால் அக்கைங்கர்ய ருசியாலே "தனம் படைத்தாரிலல்லேன்" என்று குறையுற்றுச் சொல்லிக் கொண்டதில் தகுதியின்மை யொன்றுமில்லை. இந்த ப்ரஸங்கத்தில் மற்றொரு விசாரமும் செய்ய ப்ராப்தமாகிறது.

கைங்கரியம் செய்வதற்குப் பல வுபகரணங்கள் உண்டு. மநஸா செய்வது மாநஸிக கைங்கரியமாகும். வாக்கினால் செய்வது, அதாவது ஸ்துதிகளைச் சொல்லி யேத்துவது, வாசிக கைங்கரியமாகும். சரீரத்தை ச்ரமப்படுத்திச் செய்யுமது காயிக கைங்கர்யமாகும். பொருள்களைச் செலவழித்துச் செய்யுமது ஆர்த்திக கைங்கர்யமாகும். மாநஸிக வாசிக கைங்கர்யங்களை விட்டிட்டு, காயிக ஆர்த்திக கைங்கரியங்களைப் பற்றிச் சிறிது விசாரணை செய்வோம். நாம் சரீரததினால் செய்யும் கைங்கரியங்களினால் எம்பெருமானுக்குத் திருவுள்ளம் உகக்குமா? தனத்தினால் செய்யும் கைங்கரியங்களினால் திருவுள்ளம் உகக்குமா? என்று ஆராய்வோமாகில், தனத்தினால் செய்யும் கைங்கர்யங்களினால் அவன் திருவுள்ளம் உகவாது; தேஹத்தை ச்ரமப்படுத்திச் செய்யும் கைங்கரியங்களினால்தான் திருவுள்ளம் மிகவுகக்கும் என்று ஸித்தாந்தம் செய்ய முடியும். எதனாலென்னில், கேண்மின். நமக்கு சரீரத்தில் அதிக ச்ரத்தையா? தனத்தில் அதிகச்ரததையா? என்று பார்ப்போம். குற்றம் செய்தவர்களுக்கு ராஜ தண்டனை விதிக்கப்படுகிறது. நான்காயிரம் ரூபாய் அபராதம்; அது செலுத்தத் தவறினால் ஒருமாதம் கடினக்காவல் என்று தண்டனை விதிக்கப்படுவதாக வைத்துக் கொள்வோம். இப்படி விதிக்கும்போது பரமதரித்ரரான யாரோ சிலர் சிறையிருக்க முன் வருகிறார்களே தவிர, சிறிது துட்டு காசு உள்ளவர்கள் பணத்தைன அவலீலையாகச் செலுத்திவிட்டு

தேஹத்தைக் காப்பாற்றிக் கொள்ளப் பார்க்ககிறார்கள். செய்த குற்றத்திற்கு ஒருவாரம் கடினக்காவல் என்று சிக்ஷை விதிக்கப்பட்டால் அதை மாற்றிக் கொள்ளப் பதினாயிரம் ரூபாயும் செலவு செய்யத் துணிகிறார்கள். இவற்றால் நாம் என்ன அறிகிறோம்? ஜனங்கள் த்ரவயத்திற்காட்டிலும் தேஹத்தில் அளவுகடந்த ப்ரீதி வைத்திருக்கிறார்கள் என்பதை ஸ்பஷ்டமாகக் காண்கிறோம். அப்படி ப்ரேமத்துடன் காக்கப்படுகிற தேஹத்தை ச்ரமப்படுத்திச் செய்யும் கைங்கர்யமே யல்லவா உண்மையில் எம்பெருமானுக்கு அந்தரங்கத்தில் உகப்பை விளைவிக்கும்.

திருவாய்மொழியில் சாமாறும் கெடுமாறும் (4–9–2) என்கிற பாட்டின் ஈடு முப்பத்தாறாயிரப்படி வியாக்யானத்தில் ஆச்சரியமான கதையொன்று எழுதப்பட்டிருக்கின்றது; அதாவது – ஒருவன் ராஜத்ரோஹக் குற்றத்திற்காகத் தண்டனையடைந்தானாம்; என்ன தண்டனை யென்னில், கையையும் காலையும் தறித்து விட்டார்களாம்; இரண்டொருநாளில் உயிர் போகப்போகிறது. ஒரு ஆப்தர் அவனை விசாரிக்கச் சென்று 'ஐயோ இப்படியாயிற்றே!' என்று வருந்தினாராம். அதற்கு அவன் சொன்ன வார்த்தை: "ஆயிரம் தா, ஐந்நாறு தா என்னாதே இவ்வளவோடே போயிற்றே" என்றானாம். ஆயிரம் ரூபாயோ ஐந்நூறு ரூபாயோ அபராதம் செலுத்தும்படி ச்ரமப்படுத்தாமல் கையையும் காலையும் வெட்டினதற்கு இவன் பரமஸந்தோஷமடைந்ததாக இக்கதையினால் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட க்ருபணர்கள் சரீரத்திலே ச்ரத்தை கொள்ளாமல் தனத்திலே ச்ரத்தை கொண்டிருப்பர்களாகில் அன்னவர்கள் தனத்தினால் கைங்கரியம் செய்தே எம்பெருமானையுகப்பிக்கக் கடமைப்பட்டவர்களாவர்.: இப்படிப்பட்ட அதிகாரிகள் மிகச் சிலரே தேறுவர்கள். பெரும்பாலும் தனத்தை அவலீலையாகச் செலவு செய்து தேஹத்தை நிழலிலே வைத்துக் காப்பாற்றுபவர்களாகவே தேறுவர்கள். அப்படிப்பட்டவர்கள் காயிககைங்கரியம் செய்தால்தான் எம்பெருமான் திருவுள்ளமுகக்கும். தொண்டரடிப்பொடி யாழ்வார் தம்முடைய திருமேனியை ச்ரமப்படுத்திக் கைங்கரியம் செய்தவர் என்பது இவருடைய சரிதையில் ப்ரஸித்தமானது. அப்படியிருக்க இவர் "தனம்படைத்தாரிலல்லேன்" என்று குறைப்பட வேண்டாவே யென்று சங்கிக்க நேரும்.

இதற்குச் சொல்லுகிறோம். தேஹ ச்ரமத்தினால் கைங்கரியம் செய்வதானது அக்காலத்தளவிலே நிற்குமத்தனை. தோட்டம் சமைத்துப் பூஞ்செடிகளை வளர்ப்பதோ, பகவத் ஸந்நிதிகளில் திருவிளக்கெரிக்கை, சாமரம் பணிமாறுகை, ஸ்ரீபாதம் தாங்குகை முதலான கைங்கரியங்கள் செய்வதோ இவையெல்லாம் அக்காலத்தோடு ஸமாப்தம். அபரிமிதமான பொருட்செலவு செய்து பண்ணப்படுகிற கைங்கரியங்களானவை, திவ்யாபரண பீதாம்பர வாஹந ஸ்வர்ணரஜதபாத்ராதி ரூபேணவும் கோபுரப்ராகாரமண்டப தர்மசாலாதி ரூபேணவும் நீடு காலம் நிலைநின்று விளங்குமன்றோ! சென்ற நூற்றாண்டில் வேங்கடாத்ரி யென்றொரு பாகவதோத்தமர் இருந்தார். இற்றைக்கும் இவருடைய திருநாமத்தைக் கேள்விப்படாதாரில்லை. இவர் மஹாத்மாவென்று உலகங்கொண்டாட நிற்பவர், பரமவிரக்தரென்று புகழ் பெற்றவர். இவருடைய கைங்கரியமான ரத்னகிரீடங்கள் மற்றும் பல திவ்யாபரணங்கள் கோயில் திருமலை பெருமாள் கோயில் முதலான திவ்யதேசங்களிலே நாளைக்கும் பக்தஜந நயநாஹ்லாதகங்களாய் விளங்குகின்றன. "தேவப்பெருமாள் இன்று வேங்கடாத்ரி கொண்டை சாத்திக் கொள்ளுகிறார்" என்றால் பக்த ஜனங்களின் குதூஹலம் வாசாமகோசரம், இக்கைங்கரியங்களுக்காக இம்மஹாத்மா பொருளீட்டினபோது "பத்து ரூபாய்க்குக் குறைவாக என்றைக்குக் கிடைக்கிறதோ, அன்றைக்கு சுத்தோபவாஸமிருந்து விடுவது" என்று விரதம் கொண்டிருந்தாராம். அவ்வாறாகத் தனம் படைத்து அவர்செய்த கைங்கரியம் கல்பாந்தமாக விளங்கியன்றோ பக்தர்களை மகிழ்விக்கக் கூடியதாகவுள்ளது.

‘‘என்னாவிலின் கவி யானொருவர்க்கும் கொடுக்கிலேன்’’, ‘‘வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவியேனல்லேன்’’ என்று நம்மாழ்வார் கொண்டிருந்த விரதம் திருமங்கையாழ்வார்க்கும் உண்டு. ஆனால் அவ்வாழ்வார் தம்முடைய பெரிய திருமொழியில் பல பதிகங்களில் மானிடர்களைக் கொண்டாடிப்பாடுகிறார். எந்த மானிடர்களைப் பாடுகிறாரென்னில்; விசேஷமான பொருட்செலவு செய்து திவ்யதேசங்களில் சாச்வத கைங்கர்யங்களைச் செய்த மஹாநுபாவர்களையே பாடியிருக்கிறார். ‘‘மன்னுதண்பொழிலும் வாவியும் மதிளும் மாடமாளிகையும் மண்டபமும், தென்னன் தொண்டையர்கோன் செய்த நன்மயிலைத் திருவல்லிக்கேணி’’ என்றும், ‘‘மன்னவன் தொண்டையர் கோன் வணங்கும் நீண்முடிமாலை வயிர மேகன் தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சியட்டபுயகரத்து’’ என்றும், ‘‘பல்லவன் வில்லவனென்றுலகிற் பலராய்ப் பல வேந்தர்வணங்கு கழற் பல்லவன் மல்லையர்கோன்பணிந்த பரமேச்சுர விண்ணகரம்’’ என்றும், ‘‘இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோளீசற்கு எழில் மாட மெழுபது செய்துலகமாண்ட திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில் திருநறையூர் மணிமாடம்’’ என்றும் அருளிச் செய்துள்ள பாசுரங்கள் காண்க.

தனத்திற்கு இரண்டுவகையான உபயோகமேயுள்ளது. தானும் தமர்களுமாக வயிறாரவுண்டு பல்வகைப்பட்ட போகங்களையுமநுபவிப்பது ஒன்று, ஸத்பாதர பூத பகவத் பாகவத விஷயங்களிலே விநியோகிப்பது மற்றொன்று. தாங்கள் வயிறார வுண்பதற்குப் பர்யாப்தமான பொருள் இல்லாதவர்கள் பகவத் பாகவத விஷயங்களிலே கிஞ்சித்கரிக்க ப்ரஸக்தியில்லை. புஷ்கலமான செல்வம் படைத்தவர்கள் கீழே சொன்ன இருவகை யுபயோகங்களையும் நடத்தி வருவார் இக்காலத்திலும் இல்லாமற் போகவில்லை ; ஆங்காங்கு விரளமாகவுள்ளார்கள். தாமும் தமர்களுமாக வயிருரவுண்டு பலவகைப்பட்ட போகங்களையு மநுபவித்து ஸத்பாத்ர விநியோகத்தில் கண்செலுத்தாதேயிருப்பார் பலருளர். அவர்களைப்பற்றியும் நமக்கு விசாரமில்லை. தாமுமுண்ணாதே தமர்களுக்குமிடாதே ஸத்பாத்ர விநியோகத்தைக் கனவிலும் நினையாதே, வட்டிக்கு வட்டி வசூலித்துத் தனரக்ஷக நிதிகளில் பல லக்ஷக்கணக்கிலே பணத்தைச் சேமித்து வைத்து இதுவே ஆனந்தமாகவிருப்பார் எங்கும் நிறைந்துள்ளார்கள். இவர்கள் ‘தனிகர்’ என்கிற பெயரொன்றுக்கே ஆசைப்படுவர்கள்.

‘‘நாம் பிறக்கும்போது கையிலே ஒருகாசு கொண்டு வந்திலோம்; இறக்கும்போது அரைநாணையும் அறுத்துக் கொண்டு நம்மைப் போகவிடுகிறார்கள். ஏதோ இடையில் சில தாண்டவங்கள் நடக்கின்றன. எம்பெருமான் நம்மைக் கூடியமட்டிலும். நல்ல ஸ்திதியில் வைத்திருக்கிறான்; நாமும் நமரும் உண்டு மிகுந்ததை யதாசக்தி ஸத்பாத்ரங்களிலே விகியோகித்துக் களிப்போரம் என்று நினப்பவர்கள் மிகச்சிலரே. செல்வமில்லாதவர்களுக்கு இப்படிப்பட்ட குதூஹலங்கள் மிகுகின்றன. செல்வமுள்ளவர்களுக்கு “த்ருடதரநிபத்த முஷ்டே: கோசநிஷண்ணஸ்ய ஸஹஜமலிம்நஸ்ய, க்ருபணஸ்ய க்ருபாணஸ்ய ச கேவலமாகாரதோ பேத:’’ என்று கவியியற்றும்படியான கார்ப்பண்யம் வளருகிறது. கூரத்தாழ்வான் ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில் “பூயாநஹோ பரிகர: ப்ரதிகூல பக்ஷே” என்று அத்புதமான வொரு ஸூக்தியருளிச் செய்கிறார். அஃது உலகத்தில் பல விஷயங்களுக்கு ஒத்து வருகின்றது. பகவத் ஸங்கல்பத்திலேயே குறை கூறுவதுபோல் அந்த ஸ்ரீஸூக்தி காண்கிறது. ஸங்கல்பஸூர்யோதயத்தில் “ஸர்வத: கரவீராதீத் ஸூதே மாகரமேகலா, ம்ருதஸஞ்ஜீவநீ யத்ர ம்ருக்யமாண தசாம் கதா” என்று கூறின ஆசிரியர்க்கும் இதுவே திருவுள்ளம் போலும். . தனத்தைக் கொடுத்து மனத்தை இல்லை செய்கிறான் ; மனத்தைக் கொடுத்து தனத்தை இல்லை செய்கிறான். எவன்? நாட்டைப் படையென்றயன் முதலாத் தந்த நளிர்மா மலருந்தி வீட்டைப்பண்ணி விளையாடும் விமலனான அவனே.

# உதகஸாங்தியின் உட்பொருள்

ஸ்ரீமதுபயவே. வில்லூர் நடாதூர் ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனம் சாஸ்த்ரஸாஹிதீவல்லப

## கருணாகராசார்யஸ்வாமி

காட்டு மன்னார் கோவில் ஸ்ரீநாதமுனிகளின் ஸந்நிதியில் அடியேனுக்குத் தனியான ஈர்ப்பு உண்டு. காரணம்,

அங்கு ஸ்ரீநாதமுனிகளின் மூலபேரத்தின் திருவடி வாரத்தில் அவருடைய சிஷ்யர்களின் திருமேனிகள் உள்ளன. அவற்றில் மேலை அகத்தாழ்வான் மற்றும் கீழை அகத்தாழ்வான் ஆகியோர்களின் திருமேனிகளும் எழுந்தருளப் பண்ணப் பட்டிருக்கின்றன. யார் இந்த மேலை அகத்தாழ்வான் மற்றும் கீழை அகத்தாழ்வான்?

ஸ்ரீமந்நாதமுனிகளின் ஸஹோதரீகள் இருவர். அவர்களில் ஒருவரின் குமாரர் வரதன் என்பவர். இவரே மேலை அகத்தாழ்வான். இவர் ஸ்ரீவத்ஸகோத்ரத்தவர். இவரைப் போலவே ஸ்ரீமந்நாதமுனிகளின் மற்றோர் ஸஹோதரீயின் குமாரர் க்ருஷ்ணன். அவர் வாதூல கோத்ரத்தவர். அவரைக் கீழையகத்தாழ்வான் என்று அழைத்தனர்.

ஸ்ரீமந்நாதமுனிகள் தாம் 12000 முறை கண்ணிநுண்சிறுத்தாம்பை ஜபித்துத் தவம் புரிந்து நம்மாழ்வாரை யோக நிலையில் ஸாக்ஷாத்கரித்து அவர் அருளால் பெற்ற அருளிச் செயல் நாலாயிரத்தையும் இவர்கள் இருவருக்கும் தான் முதலில் கற்பித்தருளினார். அவர்களையே ஆதி அரையர்களாக்கித் திருவரங்கன் முன் அரையர் ஸேவையுடன் அத்யயன உத்ஸவம் நடக்கும் முறையையும் ஸ்ரீமந்நாத முனிகள் ஏற்படுத்தினார்.

மேலை அகத்தாழ்வான் மிடற்றோசை- குரல்- காஹலம்-காளம் என்னும் இசைக் கருவியின் ஒலி போல இருக்குமாம். கீழை அகத்தாழ்வான் மிடற்றோசை வலம்புரிச் சங்கின் முழக்கம் போல இருக்குமாம். இதனை ஸ்வாமி தேசிகனுடைய

காளம் வலம்புரி அன்ன நற்காதல் அடியவர்க்குத்
தாளம் வழங்கித் தமிழ்மறை இன்னிசை தந்த வள்ளல்
மூளும் தவநெறி மூட்டிய நாதமுனி கழலே
நாளும் தொழுதெழுவோம் நமக்கார் நிகர் நானிலத்தேச

என்ற குருபரம்பராப்ரபாவப் பாசுரம் நமக்குக் காட்டிடுகின்றது.

மேலை அகத்தாழ்வானின் திருக்குமாரர் நிர்மலதாஸர். அவர் திருக்குமாரர். ஜ்ஞானவராஹர். அவர் திருக்குமாரரே திருக்குருகைக் காவலப்பன். அவர் வரை ஸ்ரீமந்நாதமுனிகள் வழியாக வந்த பக்தியோகம் செய்யும் முறை தொடர்ந்து வந்தது. அந்த முறையை அறிய விழைந்தார் ஆளவந்தார். ஆளவந்தாருக்கு தான் பரமபதம் எழுந்தருளப் போகும் நாளைக் குறித்துக் கொடுத்து அன்றைய நாளில் வந்து உபதேசம்

பெற்றுக் கொள்ளலாம் என்று திருக்குருகைக் காவலப்பன் அருளினார். அவர் குறித்துக் கொடுத்த தைப் புஷ்யநாளில் அபிஜின் முஹூர்த்தத்தில் அப்பொழுது திருவனந்தபுரம் யாத்திரையில் இருந்ததால், அவர் இருந்த இடத்திற்கு ஆளவந்தாரால் செல்ல இயலவில்லை. இதனால் நம் ஸம்ப்ரதாயத்தில் திருக்குருகைக் காவலப்பனுடன் பக்தியோகம் பயிலும் முறையே மறைந்து போயிற்று. திருக்குருகைக்காவலப்பனின் திருக்குமாரரே மஹாகாருணிகர். மஹாகாருணிகர் என்பது பேரருளாளன் என்ற தமிழுக்கான ஸம்ஸ்க்ருதச் சொல்..

மஹாகாருணிகர். பேரருளாளப் பெருமானிடம் பெரும் பக்தி கொண்டிருந்தார் யோகிகளின் ஸந்ததியில் வந்த அந்த மஹாகாருணிகர் காஞ்சீபுரத்தில் அஷ்ட புஜப் பெருமாள் ஸந்நிதிக்கும் வேளுக்கை எம்பெருமான் ஸந்நிதிக்கும் இடையில் வேகவதீநதிக் கரையில் ஓர் ஸ்ரீவைஷ்ணவ அக்ரஹாரத்தை உருவாக்கினார். அதற்கு நடாதூர் என்று பெயர் சூட்டினார்.

இப்படி நடாதூர் அக்ரஹாரத்தை ஸ்தாபித்த மஹாகாருணிகர் எம்பெருமானாருடைய ஸஹோதரீ கமலா அம்மங்காரைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுடைய திருக்குமாரரே வரதவிஷ்ணு. இவரையே நடாதூர் ஆழ்வான் எனவும் வழங்கினர்.

கூரத்தாழ்வான், எம்பெருமானாரின் மற்றோர் ஸஹோதரீயின் குமாரரான முதலியாண்டான் மற்றும் மேற்படி நடாதூர் ஆழ்வான் ஆகிய இம்மூவரே எம்பெருமானாரின் ஆதி சிஷ்யர்கள்.

எம்பெருமானாரைப் பாதுகாத்திடவே எம்பெருமான் ஸ்ரீஸுதர்சன பகவானை நடாதூர் ஆழ்வானாகவும் பாஞ்சஜன்யத்தை முதலியாண்டானாகவும் அவதரிக்கச் செய்தான் என்றும் முன்னோர் கூறியுள்ளனர்.

நடாதூர் ஆழ்வானை எம்பெருமானாரின் ப்ரியபாகினேயர் (இனிய மருமகன்) என்று குருபரம்பரைகள் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

எம்பெருமானார் திருநாட்டுக்கு எழுந்தருளிடுகையில் தமது ஸ்ரீபாஷ்ய ஸிம்ஹாஸனத்தை இவருக்கு அருளியதாக ஆறாயிரப்படி முதலான அனைத்து குருபரம்பரைகளும் குறிப்பிட்டுள்ளன. இவருடைய தனியன்கள் என்று மூன்று ச்லோகங்கள் தொன்மையான குருபரம்பரைகளில் காணக் கிடக்கின்றன. அவற்றுள் ஒன்று

ஸத்குர்வதா ஸம்ஸதி சிஷ்யவர்க்காந் அநந்யலப்யைரகிலைஸ்ஸவசிஹ்நை:

ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனமாத்மநீநம் யஸ்மை ச தத்தம் யதிச்கரேண

இது இவருக்கு எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனம் அளித்துச் சிறப்பித்தருளிய வரலாற்றினைச் சித்தரிப்பதைக் காணலாம்.

ஸ்ரீநடாதூர் அம்மாளின் திருப்பேரனாரின் பேரரான கடிகாசதம் அம்மாள் - (ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனுடைய ஆசார்யன் - தமது யதிராஜவிஜயத்தில் தொடக்கத்தில் இந்தத் தனியனைக் கையாண்டுள்ளார். நிறைவில்

நடாதூர் ஆழ்வானுக்கு ஓர் சிறப்பு செய்திட வேண்டும் என்று வேதாந்த புருஷனாகிய மஹாராஜா தமது அமைச்சராகிய ஸ்ரீராமானுஜரிடம் கூறுவதாக ஒரு காட்சியை அமைத்துக் காட்டிடுகிறார். வேதாந்தபுருஷனாகிய மஹாராஜாவின் பொருளை (செல்வத்தையும்) பற்றி ஆயும் திறமை பெற்ற நடாதூராழ்வானை வேதாந்த கோசாதிகாரியாகவே பொக்கிஷத்துப் பொறுப்பாளராகவே - அதாவது ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனாதிபதியாகவே அமர்த்திவிட்டதாக வேதாந்த மஹா ராஜாவிடமே எம்பெருமானார் தெரிவிப்பதாகவும் மிக நயமாக வருணிக்கிறார்.

இப்படி அடியோங்களின்- அதாவது நடாதூர் வம்சத்தினரின் முன்னோரான மேலை அகத்தாழ்வான் ஸ்ரீமந்நாதமுனிகளின் திருவடி வாரத்திலே ஸேவை ஸாதித்தருளும் அந்த ஸன்னிதியில் அடியேனுக்குத் தனியோர் ஈடுபாடு இருப்பதில் அதிசயம் ஒன்றுமில்லை.

அந்த ஸன்னிதியின் விமானத்தில் ஸுதர்சன சக்ரத்தில் சதுர்புஜ வேணுகோபாலன் ஸேவை ஸாதிக்கும் பதுமை ஒன்று இருக்கிறது.

திருமாலிருஞ்சோலை அழகர் கோவில் வடக்குப் ப்ராகாரத்தில் திருமாலையாண்டான் ஸன்னிதிக்கு அருகில் விச்வரூப வேணுகோபாலன் ஸேவை ஸாதிக்கிறான். இவனுக்கு எட்டு திருக்கரங்கள். அதைப் போலவே அழகர் திருக்கோயிலின் முன் மண்டபத்திலேயும் ஒரு தூணில் அழகிய அஷ்டபுஜ வேணுகோபாலன் சிற்பம் ஒன்று சிறிதே சிதைந்த நிலையிலே உண்டு.

அடியோங்கள் முன்னோர்கள் காஞ்சீயிலிருந்து தெற்குத் திருமலை மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூருக்கும் இடையில் உள்ள வில்லூருக்குப் புலன் பெயர்ந்தவர்கள். எனவே அடியேனுக்குத் தெற்குத் திருமலையிலும் தனியான ஈடுபாடு. அதனால் அடியேன் தெற்குத் திருமலையின் நினைவும் ஸ்ரீமந்நாதமுனிகளின் விமானமும் நினைவில் வர வாய்ப்பாக ஸ்ரீஸுதர்சன சக்ரத்திலே அஷ்டபுஜ வேணுகோபாலன் காட்சி தருவதாக கனகாஞ்ஜனாசல விமானத்தின் பிற் சுவரில் ஓர் புடைச் சிற்பம் அமைக்கும் படி ஸ்தபதி ஸ்ரீமான் மோஹன் ராமைக் கேட்டுக் கொண்டேன்.

அப்படி ஓர் திவ்யமங்கள விக்ரஹத்தைப் பற்றிய வர்ணனை அவர் பார்த்த சில்ப சாஸ்த்ரங்களிலோ அல்லது ஆகமங்களிலேயோ இல்லை என்றார் அவர் .ஆனாலும் தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே என்ற படி தேவரீர் உகந்த திருவுருவம் அவன் திருவுருவம் என்று அடியேன் விரும்பிய படியே புடைச் சிற்பத்தினை அமைத்துப் பொன்னை இழைத்து அந்த விமானத்தைச் செய்து கொடுத்தார்.

இவை எல்லாம் நிகழ்ந்த பின் 2007- ஆகஸ்டு 31ல் அடியேன் பணி ஓய்வு பெற்றேன. அதன் பின் ஆராவமுதாழ்வான் ஸந்நிதியில் அடியேன் சில பல சிறு சிறு திருப்பணிகள் செய்யத் தொடங்கினேன். ஆராவமுதாழ்வான் ஸந்நிதியில் ஏழு நாள்கள் நடக்கும் பவித்ரோத்ஸவத்திலே வேதபாராயணமே சில பல ஆண்டுகளாக நடக்கவில்லை. அது நடக்கும் படி ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று சில அன்பர்கள் கூறினார்கள்.

பல பல வைதிகப் பணிகளால் மிகவும் பரபரப்புடன் இருந்து கொண்டிருக்கும் வேத வல்லுனர்களைத் திருக்குடந்தைக்கு எழுந்தருளப் பண்ணி, அவர்களை ஏழு நாள்கள் அங்கேயே தங்க வைத்து, அவர்கள் திருவுள்ளம் நிறையும் படி ஆராதித்துப், பாராயணத்தைச் செய்விப்பது இந்தக் கடிய வான விமான வேகக் காலத்தில் புயல் காற்றைக் குடத்திலே பிடித்து வைக்க முயல்வது போல!. அது அவ்வளவு எளிதல்ல.

இதனை அனுபவத்தினால் உணர்ந்தவன் அடியேன். எனவே அடியேன் மட்டும் அங்கே தங்கிப் புத்தகத்தின் துணையுடன் பாராயணம் செய்து விடலாம் என்று முடிவு செய்து கொண்டேன். திருக்குடந்தையில் ஸ்ரீமதஹோபிலமடத்தில் தங்கிக்கொள்ள ஸ்ரீமதழகியசிங்கர்கள் அனுக்ரஹித்தார்கள். கனகாஞ்ஜனாசல விமானத்திலே திகழும் திருமாளிகைப் பெருமாள்களுடன் சென்று வேதபாராயண கைங்கர்யத்தைச் செய்தேன்.அங்குள்ள ஸ்ரீமதஹோபில மடத்திலே ஆராதகராகப் பணிபுரிந்த ஸ்ரீமதுபயவே கேசவாசார்ய ஸ்வாமி தனக்கு இயன்ற பொழுதெல்லாம் பாராயணத்தில் பங்கேற்றார். அரியக்குடி ஸ்ரீமதுபயவே கண்ணன் ஸ்வாமி மூன்று நாள்கள் பங்கேற்றார்.

( இப்படி அடியேன் இரண்டு ஆண்டுகள் பெரும்பாலும் ஒருவனாகவே போராடி இப்பணி செய்து வருவதைத் திருச் செவிசாய்த்த ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன் ஸ்ரீரங்கராமானுஜ மஹாதேசிகன் பரமக்ருபையுடன் திருவயிந்தை ஆச்ரமத்து வேத பாடசாலை மாணவர்கள் சிலரைப் பாராயணத்துக்கு அனுப்பி வைத்தருளியபடி. இதனால் அடியேன் மெள்ள அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு சாற்றுமுறை நாள் மட்டும் சென்று கலந்து கொள்ளும் நிலை வந்தது )

ஏழு நாள் பவித்ரோத்ஸவத்தினையுமே சென்னை ஸ்ரீ ஆர்.கே ஸ்வாமியின் ஸஹோதரர் ஸ்ரீநாராயணன் நிர்வஹித்து வந்தார். ஆராவமுதாழ்வானிடம் அபார ஈடுபாடு கொண்டிருந்த அவர், திருக்குடந்தையிலேயே ஆராவமுதாழ்வான் ஸந்நிதி வீதியில் ஓர் இல்லத்தின் மாடியிலேயே குடி இருந்தார். அவர் தமது இருப்பிடத்திற்கு அடியேன் வரவேண்டும் என்று அன்புடன் வலியுறுத்தி அழைத்துச் சென்றார். அந்த மாடிப்படிகளில் ஏறுகையில், ஆராவமுதாழ்வானுடைய ராஜகோபுரத்தின் மூன்றாம் நிலைச் சிற்பங்களை எளிதாக ஸேவிக்க முடிந்தது. அங்கே ஒரு சிற்பத்தில் ஸுதர்சன மண்டலத்தில் அஷ்டபுஜ வேணுகோபாலன் ஸேவை ஸாதித்தான். மெய் சிலிர்த்துப் போனேன். அடியேன் எவ்வண்ணம் சிந்தித்துக் கனகாஞ்ஜனாசல விமானத்திலே அந்த எம்பெருமானை எழுந்தருளப் பண்ணி இருந்தேனோ, அப்படியே இருந்தது அந்த ராஜகோபுர பிம்பம்! ஆக இந்த வடிவமும் நம் ஆகமங்களில் எங்கேனும் வருணிக்கப் பட்டிருக்க வேண்டும். இல்லை என்றால் ஏறத் தாழ நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட அந்த ராஜகோபுரத்திலே இந்த பிம்பம் எப்படி இடம் பெற்றிருக்கும்?.

இப்படிக் கணக்கற்ற பிம்பங்கள்.உள்ளன. ஆகம அனுபவம், அருளிச் செயல் அனுபவம் என்று இவைகளுடன் அதில் உள்ள ஒவ்வொரு பிம்பத்தையும் அணுகி ரஸிக்க வேண்டும். அதற்கு அந்த பிம்பங்களை எல்லாம் படம் எடுத்து விளக்கக் குறிப்பு எழுத வேண்டும். இது அடியேனுடைய பேரவாக்களில் ஒன்று. (தொடரும்)

ஸ்ரீராமாநுஜதாஸோஹம்

श्री:



Srimathe Ramanujaya Namaha | Srinivasaya Mangalam | Sri Varavara Munaye Namaha

**SRI BHAGAWAT RAMANUJA SIDDANTHA PRACHAR SABHA (Regd.)**

(301. RNA Park View. Road No. 4. CHEMBUR. MUMBAI – 400071) CONTACT NOS. 9869441127 / 9821013274

# *RAMANUJA DASOHAM*

# ஸ்ரீராமாநுஜ தாஸோஹம்

# SRI BHAGAWAT RAMANUJ SIDDANTHA PRACHAR SABHA (Regd.)

**(Regn No.: 798 dated 23.05.2003under Societies Regn. Act, 1860 & FR-25901dated 16.10.2003 under Bombay Public Trust Act 1950)**

**Regd. Off.: 301, RNA Park View, Road No. 4, Opp. Gandhi Maidan, Chembur, Mumbai-400071. Mob.:98210 13274**

**Portal: https://www.mumbairamanujasabha.org**

Patron Saints

**Sri Vanamamalai H H Sri Madhurakavi Ramanuja Jeer Swamigal**
**Sri Tirupathi H H Periya Kovil Kelvi Appan Jeer Swamigal &**
**H H Siriya Kovil Kelvi Appan Jeer Swamigal**

Managing Committee

President

**Sri P Sundararajan**

| Vice President | Hon. Gen. Secretary | Hon. Treasurer |
|---|---|---|
| **Sri S Ramanujam** | **Sri P V Kulasekhar** | **Sri P Srinivasan** |

Members

| | | | |
|---|---|---|---|
| **Sri R Raghavan** | **Sri S Seshadri (Mulund)** | **Sri K S Ravi** | **Sri S Raghunathan** |
| **Sri S Ramesh** | **Sri P Thiruvengadam** | **Sri S Raghavan** | **Sri A P Kannan** |
| **Sri P S Ramanujam** | **Sri M P Govindarajan** | **Sri V Suresh Kumar** | **Sri K Gopal Chari** |
| **Sri R Ramachandran** | **Sri (Dr) K Raghuraman** | **Sri S Vijayaraghavan** | **Sri R Sundararajan** |

Hon. Advisors

**Sri S Pattabhiraman** **Sri S Sadagopan** **Sri R G Rajan**

Internal Auditor

**Sri C Rajagopalan**

OUR MOTTO : SERVICE TO HUMANITY IS SERVICE TO GOD

ALL ARE WELCOME TO JOIN SRI RAMANUJA FAMILY

SABHA MEMBERSHIP DETAILS

| | | | |
|---|---|---|---|
| 1. | Life Membership | Rs. 1010/- | (One time payment) |
| 2. | Patron Family Membership | Rs. 15010/- | (One time payment) |

**Our Bank details For payment of Membership Fee or any Donation :**

State Bank of India, Chembur Branch, Mumbai – 400071

A/c Name: “SRI BHAGAWAT RAMANUJA SIDDANTHA PRACHAR SABHA”

SB A/c No.: 10339724389 – IFSC : SBIN 0000533

**Email: mumbairamanujasabha@gmail.com**

**website: https://www.mumbairamanujasabha.org**

**Facebook: https://www.facebook.com/ramanujasabha.mumbai.5**

**Youtube: https://www.youtube.com/channel/UCjK5Kx25iy5U8vUH0Jzn0Gw**

ஸ்ரீராமாநுஜதாஸோஹம்

SRI:

SRI RAMA JAYAM

SRIMATHE RAMANUJAYA NAMAHA | SRI VARAVARA MUNAYE NAMAHA |

## PRESIDENT'S PAGE

SRI RAMANUJA DASA ASTHIKA BANDHUS!

Namaskarams to all. Hope all of you celebrated in a divine way, Navaratri, Deepavali and other functions. It is heartening to note that Bharat could come out of the second wave of pandemic, to a great extent. Temples have started performing daily aradhanas with more and more kainkaryaparas and devotees. The coming months will hopefully see more and more active participation of Bhaktas.



Our 'Ramanuja Dasoham' is published with multiple objectives like reviving old rich sampradaya literature of our eminent Acharyas and scholars, familiarizing the sampradayic Tamil language to our members who are comfortable with Tamil and also reaching today's generation, who are unfortunately not conversant with Tamil due to the structure of our school curriculum, but who are still eager to catch up with our rich heritage. In this direction, we are presenting a new series of articles, under the title of "INTRODUCTION TO SRIVAISHNAVAM", in English by the young scholarly upanyasakar, Velukkudi Sri U Ve Ranganathan Swamy. I am sure it will be an enlightening series, which will benefit all those seeking to understand Srivaishnavam, in the real sense.

Your Sabha is completing 25 years of active service in the coming year. Adiyen is having peasant memories of those days, when our Sri Ramanuja Dasas, actively participated during the Vijaya yatra of H H Jeers to Mumbai, that gave enthusiasm to start our Divya Prabandha Goshti. Elders of our Sabha, guided selflessly travelling in buses and trains from their houses to temples. Then the upanyasams by learned personalities from South gave a push to attract more members. In this regard, all the temples in Mumbai like Fanaswadi Venkatesa Perumal temple, Chembur Ahobila Mutt Lakshmi Nrisimha temple, Krishnawadi temple, Ram Mandir, Goregaon, Nerul Balaji Temple, Ghatkopar Balaji Mandir, Dombivili Balaji temple and Cheeta Camp Venkatachalapathy temple extended their full support to a great extent. Though we do not have our own premises till today, these organizations gave a base for us and our Sabha to conduct our various activities. Our Sabha could be successful because of the active and exceptional cooperation of all our members. Adiyen take this opportunity to convey our Sabha's kruthagnyathai to all concerned.

We hope the Sabha's future years will be brighter with expanding membership and more and more kainkaryams for the spread of our Emberumanaar Darsanam.

With love and regards to ALL

Adiyen Ramanujadasan

*P Sundararajan*

---

WE THANK OUR DONORS

| | | | |
|---|---|---|---|
| 1. | Sri V P Vanan | Oct 2021 | Rs. 5001/- |
| 2. | Sri S Venkateswaran | Nov 2021 | Rs. 1305/- |

WE WELCOME Sri S Varadarajan Life Member Chennai

# கலியன் கண்ட கண்ணன்

ஸ்ரீ உ.வே. சிரோமணி வித்வான் திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம்

**ஸ்ரீனிவாஸாசாரியர் ஸ்வாமி**

கலியன்' என்னும் திருமங்கையாழ்வார் கண்ணனின் குணங்களையும் சேஷ்டிதங்களையும் (விளையாட்டுக்களையும்) அநுபவித்து அவ்வனுபவத்தைத் தமது பெரிய திருமொழியில் குறிப்பிட்டிருப்பதில் சிலவற்றைத் தொகுத்துக் கூறுவதே 'கலியன் கண்ட கண்ணன் ' என்னும் கட்டுரையாகும்.

திருமங்கையாழ்வார் "காமனார் தாதை நம்முடையடிகள்" (பெரிய திருமொழி 1–1–3) என்று கண்ணனைக் 'காமனார் தாதை' என்று குறிப்பிட்டார். அழகுக்கெல்லாம் உதாரணமாக கூறப்படும் காமனுக்கும் தாதை என்பதால் கண்ணனின் அழகுச் சிறப்பை அனுபவித்தார். இதைத்தான் "தீமனத்தான் கஞ்சனது வஞ்சனையில் திரியும் தேனுகனும் பூதனைதன் ஆருயிரும் செகுத்தான் காமனைத்தான் பயந்த கருமேனியுடையம்மான்" (பெரிய திருமொழி 3–10–7) என்று மேலும் அனுபவித்தார். கண்ணனது அழகு ஆழ்வாரைப் பெண்ணுடை உடுக்கச் செய்து நாயகி பாவத்தில் அனுபவிக்கச் செய்கிறது. இது அகத்துறை.

திருமங்கை மன்னரான ஆழ்வார் வீரம் மிக்கவராய் வென்றியே வேண்டி வென்றியால் பொலிவுறுவர். ஒரு வீரன் மற்றொரு வீரனின் வீரச்செயலை மதித்துக் கொண்டாடுவது இயல்பு. ஆகவே 'அம்பினால் அரக்கர் வெறுக்கொள நெருக்கி அவருயிர் செகுத்தவெம் அண்ணல்' (பெரிய திரு. 1–1–6) என்று ஸ்ரீராமபிரானின் வீரத்தை அனுபவித்தார் ஆழ்வார். மேலும் "வாலிமாவலத்தொருவனதுடல் கெட வரிசிலைவளைவித்து" (பெரிய திரு. 1–2–1) என்று ஸ்ரீராமபிரானின் வாலிவத வீரச்செயலை அனுபவித்தார். அடுத்து மூன்றாவது பாட்டில் கண்ணனது வீரச்செயலை அனுபவித்தார். "துடிகொள் நுண்ணிடைச் சுரிகுழல் துளங்கெயிற்றிளங்கொடி திறத்து ஆயர் இடி கொள் வெங்குரலினவிடை யடர்த்தவன்" (பெரிய திரு 1–2–3) என்று. அது புறத்துறை. தமிழ் இலக்கியங்கள் அகம், புறம் என்று இருவகைப் பொருளைப் பற்றிய வகையாகவே இருக்கும். "தென்னிந்தியகலாசார இரண்டாவது ஸ்ரீவைஷ்ணவ மாநாட்டி"ற்குச் சேரக் கண்ணனின் அகம் புறம் பற்றிய ஆழ்வாரின்அனுபவத்தை "கலியன் கண்ட கண்ணன்" என்ற கட்டுரை விளக்குவது பொருத்தமேயன்றோ.

ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் பிரதான தேவியாயிருப்பவள் நப்பின்னைப் பிராட்டி, கண்ணனின் மாமன் மகள். ஆயர்குல மரபுக்குச் சேர நப்பின்னையின் தகப்பனார் மதம் மிக்க ஏழு எருதுகளை அடக்கி வெற்றி கொள்ளும் வீரனுக்கே தன் மகளைத் திருமணம் புரிவிப்பதாகப் பறையடித்திருந்தார். அடலாயர் தம் கொம்பாய்

இளங்கொடி போன்றவளான நப்பின்னையின்அவயவஸௌந்தர்யத்திலும் திருமேனி லாவண்யத்திலும் ஈடுபட்டுக் கண்ணன் எம்பெருமான் "நப்பின்னையின் நலத்தை நுகர்ந்தின்புற வேண்டும் அல்லது ஏழு எருதுகளால்அடர்ப்புண்டு அழிய வேண்டும்" என்ற குறிக்கோளில் ஏழு எருதுகளின் மேல் பாய்ந்து போரிட்டு அவற்றை அடக்கி நப்பின்னையோடு மன்னிய பேரின்பமெய்தினான். ஆழ்வார் முதன் முதலில் கண்ணனின் இந்த வீரச்சரிதத்தையே அனுபவித்தார்.

ஆண்டாள் திருப்பாவையில் நப்பின்னையை "கந்தம் கமழும்குழலி, பந்தார் விரலி, கொத்தலர் பூங்குழல் நப்பின்னை, மைத்தடங்கண்ணி, செப்பன்னமென்முலைச் செவ்வாய் சிறு மருங்குல் நப்பின்னை நங்காய்" என்று நப்பின்னைப் பிராட்டியை வர்ணித்துள்ளது போல் திருமங்கை மன்னனும் நப்பின்னைப் பிராட்டியை "வெறியார் கூந்தல் பின்னை பொருட்டு ஆன் வென்றானூர்" (பெரிய திரு. 6–5–4) "பூங்குழல் பின்னைமணாளா" (பெரிய திரு. 11–2–5) "பந்தணைந்த மெல்விரலாள் பாவைதன் காரணத்தால்" (பெரிய திரு. 2–2–4) செழுங்கயல் கண்ணி திறத்து ஒரு மறத்தொழில் புரிந்து ஏறேழும் முன்னடர்த்த" (பெரிய திரு. 1–4–6) "மானேய் மட நோக்கி" (பெரிய திரு. 1–10–7) "வாராரும் முலை மடவாள் பின்னைக்காகி" (பெரிய திரு. 4–4–4) "எருதிற அகல் செய்து துணைமலி முலையவள் மணமிகு கலவியுள்" (பெரிய திரு. 8–7–2) "முருக்கிலங்கு கனித்துவர்வாய்ப் பின்னை கேள்வன்" (பெரிய திரு. 6–6–8) "மின்னினன்ன நுண்மருங்குல்" (பெரிய திரு. 5–1–6) "கொடியேரிடையாள் பொருட்டாக" (பெரிய திரு. 8–6–9) "பொன்னங்கலையல்குல்" (பெரிய திரு. 11–2–5) "தேரணங்கல்குல்" (பெரிய திரு. 1–4–6) என்று தமது பெரிய திருமொழியில் வர்ணித்துள்ளார். பேசிற்றே பேசும் ஏககண்டர்கள் ஒரே கருத்துடையவர்களன்றோ அடியார்கள். இந்த வர்ணனையில் கருத்துரையாக உள்ளுறைப் பொருள்கள் (ஸ்வாபதேசம்) பல உள்ளன. குழல் என்பது வ்யாமோஹ குணத்தை அதிக ப்ரேமத்தையும், பந்து லீலோபகரணத்தையும் கொங்கை பக்தியையும் செழுங்கயற்கண் செவ்வாய் ஞானத்தையும், அல்குல் வைராக்யத்தையும் குறிப்பதாக ஆசார்யர்கள் தங்கள் வ்யாக்யானங்களில் விளக்கியுள்ளார்கள். விரிவிற்கஞ்சி நாம் இவ்வளவோடு நிற்கிறோம். இவ்வளவாகத் திருமங்கையாழ்வாரின் காமம், வீரம் என்னும் இரு பொருளில் கண்ணனின் குணசேஷ்டிதங்களின் அனுபவத்தை ஒருவாறு குறிப்பிட்டோம்.

(இவ்விஷயம் நெய்வேலியில் கண்ணன் ஸன்னதி ஸம்ப்ரோக்ஷண சமயம் நடைபெற்ற தென்னிந்திய கலாசார இரண்டாவது ஸ்ரீவைஷ்ணவ மகாநாட்டில் உபந்யஸிக்கப் பெற்றது.)

# திருப்பாணாழ்வார்

**பெரிய நம்பிகள்அருளிய தனியன்**

*ஆபாதசூடமநுபூயஹரிம் சயாநம் மத்யேகவேரதுஹிதுர்முதிதாந்தராத்மா*
*அத்ரஷ்ட்ருதாம் நயநயோர் விஷயாந்தராணாம் யோ நிச்சிகாய மநவை முநிவாஹநம் தம்*

**திருமலை நம்பிகள்அருளிய தனியன்**

*காட்டவே கண்ட பாத கமலம் நல் ஆடை உந்தி*
*தேட்டரும்உதர பந்தம் திருமார்பு கண்டம் செவ்வாய்*
*வாட்டமில் கண்கள் மேனி முனியேறித் தனிபுகுந்து*
*பாட்டினால் கண்டு வாழும் பாணர்தாள் பரவினோமே.*

***ராகம் : தர்மவதி.   திருமேனிப்பொலிவு.  தாளம் :  ஆதி***

*59 வது மேளகர்த்தா   தர்மவதி*

***ஆ:** ஸ ரி2 க1 ம2 ப த2 நி2 ஸ,  **அவ:** ஸ நி2 த2 ப ம2 க1 ரி2 ஸ*

***பல்லவி***

*திருமேனிப்பொலிவு கண்டுகொண்டு = எங்கள்*
*திருவரங்கன்புகழ்பாடும்திருப்பாணர் பாடல் சொல்வோம். (திருமேனி)*

***அநுபல்லவி***

*திருமாலின்திருமார்பில் ========= துலங்கும் ஸ்ரீவத்ஸராகி*
*திருக்கார்த்திகை ரோகிணியில் உறையூரில் வந்துதித்த 2*
*திருக்கார்த்திகை ரோகிணியில் பாணர்குலம் ஓங்க வந்தார் (திருமேனி)*

***சரணம் 1***

*பரிதியின் உதயவேளை பாணர் கையில் வீணையேந்தி*
*பக்திஸ்ரத்தையோடே அவர் பாட்டிசைத்து தனைமறந்தார் 2*
*பாதம் வயிறு உந்தி மார்பு கண்டம் செவ்வாய் கண்கள்   என*
*பெரிய பெருமாளரங்கர் மேனியையே நெஞ்சில் கொண்டு 2 (திருமேனி)*

***சரணம் 2***

*பரந்தாமன் மனம்நோக லோகசாரங்கமுனி*
*பாதையிலே பாணர் கண்டு புலையன் எனக் கல் எறிந்தார் 2*
*பிழை உணர்ந்த முனிவரும் தம் தோள்மீது தூக்கிவர*
*திருவரங்கன் பொன்னடிக் கீழ் அமலனாதிபிரான் தந்தார் 2*
*திருப்பாணரும் திருவரங்கன் பொன்னடிக்கீழ் அமைதிகொண்டார். (திருமேனி)*

*திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்*

இயல், இசை: பா. சுந்தரராஜன், மும்பை

# திருமங்கையாழ்வார்

**திருக்கோட்டியூர் நம்பிகள்அருளிய தனியன்**

*கலயாமி கலித்வம்ஸம் கவிம் லோகதிவாகரம்*
*யஸ்ய கோபி: ப்ரகாசாபிர் ஆவித்யம் நிஹதம்தம:*

**உடையவர் அருளிய தனியன்**

*வாழிபரகாலன் வாழி கலிகன்றி*
*வாழி குறையலூர் வாழ்வேந்தன் வாழியரோ*
*மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள்*
*மங்கையர் கடன் தூயோன்சுடர்மானவேல்.*

**ஆழ்வான் அருளியது**

*நெஞ்சுக்கிருள்கடி தீபம்அடங்காநெடும்பிறவி*
*நஞ்சுக்கு நல்லவமுதம் தமிழநன்னூல் துறைகள்*
*அஞ்சுக்கிலக்கியம் ஆரணசாரம் பரசம்மயப்*
*பஞ்சுக்கனலின் பொறி பரகாலன் பனுவல்களே.*

**எம்பார் அருளியது**

*எங்கள் கதியே இராமாநுச முனியே*
*சங்கை கெடுத்தாண்ட தவராசா பொங்குபுகழ்*
*மங்கையர்கோன் ஈந்த மறை ஆயிரம் அனைத்தும்*
*தங்குமனம் நீ எனக்குத் தா.*

***ராகம் : காம்போதி கார்த்திகையில் தாளம் : ஆதி***
*28 வது மேள ஹரிகாம்போதி ஜன்யம் காம்போதி*
***ஆ :*** *ஸ ரி2 க2 ம1 ப த2 ஸ* ***அவ :*** *ஸ நி1 த2 ப ம1 க2 ரி2 ஸ*

***பல்லவி***

*கார்த்திகையில் கார்த்திகை வந்த திருமங்கை மன்னா ! உன்*
*கீர்த்திகளைக்கீர்த்தனையில் பாட வரமருள்வாயே. (கார்த்திகையில்)*

***அனுபல்லவி***

*குறையலூர் துலங்க வந்த குமுதவல்லி மணவாளா! =*
*நாலுகவிப்பெருமாளே! ஆறுப்ரபந்த நீலா! 2. (கார்த்திகையில்)*

*சரணம் 1*

*திருமணங்கொல்லையிலே திருடனான வேளையிலே*
*திருமாலின் திருவாக்கால் கலியன் திருநாமம் கொண்டாய் 2*
*திருவரங்கம் மதில் அமைத்து திருக்கச்சியில் புதையல் கொண்டு =*
*திருமாலின் அடியவர்கள் சீர்பாத தீர்த்தம் (உட்) கொண்ட 2 (கார்த்தாகையில்)*

*சரணம் 2*

*திருக்குறுந்தாண்டகமும் திருநெடுந்தாண்டகமும்*
*திருவெழுகூற்றிருக்கை திருமடல்கள் இரண்டுடனே*
*பெரிய திருமொழியும் தந்து அர்ச்சாவதாரம் ஒன்றே*
*அனைவர்க்கும் புகலிடம் என்ற அனைத்து திவ்யதேசம் நாடும் (கார்த்திகையில்)*

இயல், இசை: பா. சுந்தரராஜன், மும்பை

# ஸ்ரீமணவாளமாமுனிகள் விஷயமான எழுபத்துமூன்றுசெய்திகள்

*(அவர் இந்நிலவுலகில் 73 திருநக்ஷத்திரங்கள் எழுந்தருளியிருந்ததை நினைவில் நிறுத்திக் கொள்ளும் வண்ணமாகத் தொகுக்கப்பட்ட 73 செய்திகளின் 2–ம் பாகம்)*

*(ஸ்ரீமாமுனிகளின் அவதாரத்தின்போது. ஸ்ரீரங்கம் நம்பெருமாளை மனதில் கொண்டு அவர் பெற்றோர்கள் இட்ட பெயர் 'அழகிய மணவாளன்'. அதையொட்டி, அவர், 'அழகிய மணவாள நாயனார்' என்றும் 'அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்' என்றும் அழைக்கப்பட்டார். ஆனால் இதற்கு முன் 'அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்' என்ற பெயர் 'ஆச்சார்ய ஹ்ருதயம்' எழுதின ஸ்வாமி பிள்ளை லோகார்யாசாரியரின் திருத்தம்பியாருக்கும் இருந்தது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். )*

*27. வடதிசையில் உண்டான திருப்பதிகளை திருவடி தொழத் திருவுள்ளம் பற்றியவராய் பெரிய பெருமாளிடம் விடைகொண்டு திருமலையேறப் போவாராய் அப்போதே புறப்பட்டருளித் திருவெள்ளறை சென்று பங்கையச்செல்வியார் புருஷகாரமாய் ஸ்ரீபுண்டரீகாக்ஷனை ஸேவித்து, "பூங்கோவலூர் தொழுதும் போது நெஞ்சே" என்றபடி திருக்கோவலூர் சென்று முதலாழ்வார்களுடைய திருவடி தொழுது ஆயனாரையும் சேவித்து, அங்கிருந்து புறப்பட்டு "நீள் சோலை வண்பூங்கடிகையில்" தக்கானையும், "கடிகைத் தடங்குன்றில்" அக்காரக்கனியையும் அடைந்து மங்களாசாஸனம் செய்தருளினர்.*

*28. கீழைத் திருப்பதி சென்றடைந்த நாயனார், கோவிந்தராஜரை மங்களாசாஸனம் செய்தருளி, திருமலையடிவாரத்திலேஅழகியசிங்கரைத் தொழுது, மாம்பழஎம்பெருமானாரை தண்டன் சமர்ப்பித்துத் திருமலையைச் சென்றடைய, அச்செய்தி கேட்டு பெரிய கேள்வி ஜீயரும், ஏகாங்கி ஸ்ரீவைஷ்ணவர்களும், அனைத்துக் கொத்து பரிகரத்துடனே பூவார்கழல்களை (திருவேங்கடமுடையான் ஸ்ரீபாதுகமான, ஸ்ரீசடகோபனுக்கு ஏற்பட்ட தனித்திருநாமம்) எழுந்தருளப்பண்ணிக் கொண்டு மங்கள வாத்தியங்களுடனே எதிர்கொண்டு பிரஸாதித்தனர்.*

*29. நாயனாரும் ஸ்வாமி புஷ்கரிணியில் நீராடியருளி, திருமண்காப்பு சாத்தியருளி, வேங்கடவராகத்தைசேவித்து, அழகியமணவாளன் திருமண்டபத்தை தண்டன் சமர்ப்பித்து, ஸ்ரீபலிபீடத்தையும், செண்பகத் திருவாசலையும் கடந்து செண்பகச்சுற்றுப் பிரதட்சிணமாக எழுந்தருளி பெரிய திருவடி நாயனாரையும் தொழுது, உண்டியிலே திருமுன்காணிக்கையையும் சமர்ப்பித்து, துவார பாலகர்களுடைய அனுமதி கொண்டு உள்ளே புக்குக் குலசேகரன்படியருகே சென்று அலர்மேல்மங்கை உறை மார்பனாய் தேவாதிதேவனான, திருவேங்கடமுடையானை அனுபவித்து நிற்க, அப்பனும் தீர்த்தப் பிரசாதம், திருமாலை, ஸ்ரீசடகோபன் ஆகியவற்றை பிரசாதித்து அருளினார்.*

*30. மூன்று நாள்கள் அங்கே எழுந்தருளியிருந்த பிறகு, அங்கிருந்து "உலகேத்தும் ஆழியான் அத்தியூரான்" என்று கொண்டாடப்படும் காஞ்சிபுரம் தேவப்பெருமாளை மங்களாசாஸனம் செய்வதற்காகப் புறப்பட்டருளினார்.*

*31. திரு அனந்தஸரஸ்ஸிலேநீராடியெழுந்தருளி, திருமண்காப்பு சாற்றியருளி, அடைவே ஆழ்வார்களை சேவித்தருளி பலிபீடத்தருகே தண்டன் சமர்ப்பித்து உள்ளே புக்கு, சேர்ந்தவல்லி நாச்சியாரையும், சக்கரவர்த்தி திருமகனாரையும் திருவனந்தாழ்வானையும் தொழுது பிரதட்சிணமாக எழுந்தருளித் திருப்புற்றுக்குக் கிழாக இளையாழ்வாரை, "ஆம் முதல்வன் இவன்" என்று கடாட்சித்தருளிய யமுனைத்துறைவன் திருமுற்றத்தையும் அவர் எழுந்தருளியிருந்த கரியமாணிக்கத்தாழ்வார் ஸோபாநத்தையும் சேவித்து, அவ்வருகேஎழுந்தருளி, திருமடைப்பள்ளி நாச்சியாரையும் சேவித்து, பேரருளாளர் பெருந்தேவியாரையும் சேவித்து, ஸ்ரீஹஸ்திகிரி அருகே சென்று தண்டன் சமர்ப்பித்து, மலையாள நாச்சியாரையும் சேவித்து, பதக்ரமத்திலே படிகடந்தேறி கச்சிக்குவாய்த்தான் திருமண்டபத்திலே திருக்கச்சி நம்பி முன்னதாக வரதராஜர் திருவரங்கப் பெருமாளரையருக்கு இராமானுசனை தியாகம் செய்தருளியஸ்தலமன்றோ ? என்று அஞ்ஜலித்து புண்யகோடி விமானத்தில் எழுந்தருளியிருக்கிற பேரருளாளரை தண்டன் சமர்ப்பித்து, அனந்தரம் திருப்பல்லாண்டையும் வரதராஜ அஷ்டகத்தையும் ஸ்தோத்ர கத்யங்களையும் அநுஸந்தித்து மங்களாசாஸனம் பண்ணியருளினார்.*

*32. அங்குநின்றும் புறப்பட்டருளி, அழகிய மணவாளப்பெருமாள் நாயனார், தீபப்ரகாசர், அழகிய சிங்கர், பவழவண்ணர், வைகுண்டநாதர், வாமனர் (உலகளந்தார்), யதோத்காரி, அட்டபுயகரத்தான், இவர்களையும் ஸுதாகரர், ஊரகத்தான், பாண்டவதூதர், ஹேமவர்ணர் இவர்கள் முதலான மற்றுமுள்ள எம்பெருமான்களையும் திருவடி தொழுது நின்றார்.*

*33. காஞ்சிபுரத்திலிருந்து புறப்பட்ட நாயனார் ஸ்ரீபெரும்பூதூரேற எழுந்தருளி ஊரருகே நின்று*

*இதுவோபெரும்பூதூர்? இங்கே பிறந்தோ*
*எதிராசரெம்மிடரைத்தீர்த்தார்? இதுவோதான்*
*தேங்கும் பொருநல் திருநகரிக்கொப்பான*
*ஓங்கு புகுமுடையவூர் என்று ஊரைஅநுபவித்து ஊரிலே பிரவேசித்தருளினார்.*

*34. அங்கே எழுந்தருளியுள்ள இராமானுசர் திருவடிகளில் ஸ்ரீபாஷ்யம் காலட்சேபம் கேட்டருள்வதற்கு அனுமதி கொண்டு அங்கே எழுந்தருளியிருக்க, ராத்ரிஸ்வப்நத்திலே எம்பெருமானார் நாயனாரைஅழைத்தருளி ஸ்ரீபாஷ்ய ஸ்ரீகோசத்தைஸாதித்து, "நாமே உமக்குப் பெருமாள் கோயிலிலே ஸ்ரீபாஷ்யம் ஸாதிக்கிறோம். கிடாம்பி நாயனார் பாடேறச்செல்லும், நமக்கும் திருவாய்மொழிப் பிள்ளைக்கும் ப்ரியமாகவாசித்து பின்பு அருளிச்செயல் வியாக்கியானங்களையே பஹுமுகமாக ப்ரவர்த்திப்பியும்" (பலவழிகளில் அவற்றின் பெருமையை எடுத்துரைத்திடும்) என்று அருளிச்செய்தார்.*

*35. மீண்டும் காஞ்சிபுரம் எழுந்தருளி கிடாம்பி ஆச்சான் திருவம்சத்தவரான கிடாம்பிநாயனாரை ஸேவித்து, அவர் திருவடிகளிலே ஸ்ரீபாஷ்யம் கேட்டருளினார்.*

*36. கிடாம்பி நாயனாரும், அழகிய மணவாளப்பெருமாள் நாயனாருக்கு ஸ்ரீபாஷ்யம் ஸாதித்துக் கொண்டிருக்க, நாயனார் பலகாலும் ஈடு முப்பத்தாறாயிரப்படியை உருச்சொல்லிக் கொண்டு போகிற படியைக் கண்டு ஆச்சரியப்பட்டு, ஒருவரும் அறியாமல் ஏகாந்தத்திலே, அவருக்கு அருகில் சென்று "தேவரீர் அவதார விசேஷமென்று நிச்சயமாக அறிந்தேன், எனக்கு அத்தையொளிக்கவேண்டா, உள்ளபடி காட்ட வேண்டும்" என்றருளிச்செய்ய "ஆகில் ஆசார்யராகிய தேவரீருக்கு ஒளிக்க ஒண்ணாத, பெரிய பெருமாளுடைய ரஹஸ்நியோகத்தை (ரஹஸ்யமானகட்டளையை) ஒருவருமறியவேண்டா" என்று விண்ணபப்ஞ் செய்துகொண்டு ஏகாந்தஸ்தலத்திலே மங்கள தீபத்தை ஸ்ப்புரித்து, "அஞ்சாமலிருக்க" என்று விண்ணபப்ஞ்செய்ய, அஹிபதிநிஜாகாரத்தைக் (ஆதி சேஷனாகியவடிவினை) காட்டக்கண்டார்.*

*37. அதன்பின்பு ஒராண்டு காலம் யதோக்தகாரி ஸந்நிதியிலே ஸ்ரீபாஷ்யமும் பகவத்விஷயமும் ஸாதித்தருளினார். அது காரணமாகவே அந்த ஸந்நிதியில் மணவாளமாமுனிகள் அர்ச்சையில் உபதேசஹஸ்தமுத்திரையுடன் ஸேவை ஸாதித்தருளுகிறார்.*

*38. இவ்வாறாக திவ்யதேசங்களை மங்களாசாஸனம் செய்தருளியபிறகு, பெரிய பெருமாளைத் திருவடிதொழுது நின்றபோது அவரும் இங்கேயே "நித்யவாஸம் பண்ணும்" என்று நியமித்தருளினார்.*

*39. அழகியமணவாளப் பெருமாள் நாயனாரும் சிறப்புடைய வைபவங்களை உண்டாக்க வேணும் என்று அந்தந்த காலங்களிலே மங்களாசாஸனம் பண்ணியருள, அத்தாலே "அரங்கர் தஞ்சீர்தழைப்ப" என்கிறபடியேபெருமாளுடையதிருச்செல்வம், சிறந்த செல்வம் மல்கி என்றும் நீங்காத செல்வம் நிறைந்தது என்னும்படியாயிற்று.*

*40. பெரிய பெருமாளுடைய கைங்கர்யத்திற்கு ஸம்ஸார பந்தத்தால் ஏற்படுகின்ற ஆசௌசங்களால் எல்லாம் பகவத் அனுபவ விரோதிகளாக நாயனார் திருவுள்ளத்தில் கொண்டதால் அப்போதே தம்முடைய ஒருசாலை மாணாக்கரும் துரீயாச்ரமத்தைக் கைக்கொண்டவருமான சடகோப ஜீயர் ஸந்நிதியிலே எழுந்தருளி, அவர் திருக்கரங்களாலே திரிதண்ட காஷாயங்களைப் பெற்று, அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் ஸந்நியாஸ ஆச்ரமத்தைக் கைக்கொண்டார்.*

*41. அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் துறவறம் மேற்கொண்டது கோயிலொழுகு தரும் குறிப்புப்படி கி.பி.1425.*

*42. நம்பெருமாளும் போரவுகந்தருளி, அழகிய மணவாள மாமுனிகளை பல்லவராயன் மடத்தில் விட்டு வாருங்கோள் என்று திருவாய் மலர்நதருளினார்.*

*43. அந்த மடத்தினை வானமாமலை ஜீயர் முதலான முதலிகளைக் கொண்டு செப்பனிட்டு திருமலையாழ்வார் கூடம் என்று திருவாய்மொழிப்பிள்ளை பெயராலே ஒரு வியாக்கியான மண்டபத்தையும் (காலட்சேப கூடம்) உண்டாக்கி பிள்ளை லோகாசார்யர் திருமாளிகையிலிருந்து ரஹஸ்யம்விளைந்த மண்ணால் தாம் எழுந்தருளியிருக்கிற இடத்திற்கு திருமண்காப்பு சாற்றுவித்து, அவ்விடத்தை குருகுலவாசமாகவே எண்ணி பிள்ளை லோகாசார்யாருடைய திருவடிகளையும் தியானித்துக் கொண்டு எழுந்தருளியிருந்தார்.*

*44. அப்படி எழுந்தருளியிருந்த மணவாளமாமுனிகளைப் பெரிய பெருமாள் சந்நிதியிலே அநந்யப்ரயோஜனராய் கைங்கர்யம் பண்ணிப்போருகின்ற திருமஞ்சனம் அப்பா என்ற ஒருவர், ஜீயர் கூடவே சென்று அவர் நீராடுகின்ற ஸ்தானத்திற்கு பின்பே இருந்து அந்தக் காவிரி தீர்த்தப்பிரவாகத்தில் தப்பாமல் நீராடிக் கொண்டு போக, அவருக்கு ஞானம் ஏற்பட்டு, ஜீயர் திருவடிகளிலே ஆச்ரயித்து பேறு பெற்றார்.*

45. கோவிந்ததாஸப்பர் என்னும் பூர்வாச்ரம திருநாமத்தை உடையவரான *பட்டர்பிரான் ஜீயர், மணவாளமாமுனிகள் திருவடிகளிலே ஆச்ரயித்து மடத்திலேயே எழுந்தருளியிருந்தார்.*

*46. மணவாளமாமுனிகளும், "மதிளரங்கர் வண்புகழ் மேலான்ற தமிழ் மறைகளாயிரம்" என்று பெரியபெருமாள் விஷயமாக ப்ரதிபாதிக்கப்படுகிற திருவாய்மொழியினுடைய ஈடு முதலான வியாக்கியானங்களையும் மற்றும் உண்டான ஆழ்வார்கள் அருளிச்செய்த வியாக்கியானங்களையும் அனைவருக்கும் காலட்சேபமாக ஸாதித்துக் கொண்டும், ஸ்ரீவசனபூஷணாதி திவ்யரஹஸ்ய தாத்பர்யங்களை தர்சிப்பித்துக் கொண்டும், ஸ்ரீவைஷ்ணவ காயத்ரியான நூற்றந்தாதியை அநவரதம் அநுஸந்தித்துக் கொண்டும் விளங்கிக் கொண்டுவருகின்ற காலத்தில், பெரிய பெருமாளுடைய நியமனத்தாலே தமக்குத் திருவாராதனமாக ஸ்ரீரங்கராஜரை எழுந்தருளப் பண்ணி வைத்துப் பிள்ளை லோகாசார்யருடைய திருநக்ஷத்திரமான ஐப்பசி மாதம் திருவோணத் திருநன்னாளிலே திருப்ரதிஷ்டையும் கண்டருளப்பண்ணி, தமது திருக்கைகளாலே திருவாராதனம் ஸமர்ப்பித்துக்கொண்டு ஸ்ரீரங்கஸ்ரீக்கு மங்களதீபம் போலே எழுந்தருளியிருந்தார்.*

*47. இவ்வாறு எழுந்தருளியிருந்த மணவாளமாமுனிகளை, "வெகுகாலம் பிரிந்திருந்ததால் மனம் தளர்ந்த அரவணை மேல் பள்ளிகொண்டுள்ளபெருமாளை, ஆச்வாஸிப்பதற்கு யதிந்த்ரரான ஸ்ரீமாந்ராமாநுஜரே மீண்டும் மணவாள மாமுனிகளாக அவதரித்தார்" என்று அனைவரும் மகிழ்ந்திருந்தனர்.*

*ஒருநாள் நீராட்டத்திற்குஎழுந்தருளின ஸ்ரீமணவாளமாமுனிகள்எதிர்பாராது மழை பெய்திட அதனால் ஒரு ஸ்ரீவைஷ்ணவருடைய க்ருஹத்தின் வாசல் திண்ணையை உத்தேசித்து எழுந்தருளியிருந்தார். அப்போது அவரது திருவடி நிலைகளை அந்த வீட்டுப் பெண்பிள்ளை தம் சிரசிலே தரித்துக்கொண்டு அந்தத் திருவடிகளுக்குத் தலைப்பாலே திருவொற்றாடை சமர்ப்பித்து மீளவும் சிரசிலே வைத்துக் கொண்டார். ஜீயரும் நீ யார் ? பேரேது ? இது யாருடைய திருமாளிகை ? என்று கேட்டருள "தேவரீர் திருவடி ஸம்பந்தியாய் இருக்கிற திருமஞ்சனம் அப்பாவுடைய பெண். அடியேன் பெயர் ஆச்சி. இது அவருடைய மணவாளப் பிள்ளை கந்தாடை ஐயங்காருடைய க்ருஹம்." என்று விண்ணப்பம் செய்யக் கேட்டு உகந்தருளி 'நம்முடைய அப்பாச்சியாரோ' என்று அருளிச் செய்து மழை நின்றவுடன் திருக்காவிரிக்கு எழுந்தருளினார்.*

*ஜீயர் திருவடிகளிலேஆச்ரயிக்க வேணும் என்று ருசி பிறந்த ஆச்சிக்கு அவருடைய திருத்தகப்பனார், ஜீயர் திருக்கரங்களாலே ஸமாச்ரயணம் செய்துவித்தார். திருமஞ்சனம் அப்பாவும் தம்முடைய குமாரத்தியாரை தம்முடைய திருமாளிகையிலே சில நாள்கள் இருக்கும்படி நியமித்தருளினார்.*

*48. வரதகுருநாராயணன் என்ற திருநாமம் கொண்டவரும் பின்பு ஸ்ரீமணவாளமாமுனிகள்திருவடிகளைஆச்ரயித்தவருமானகந்தாடை அண்ணன், திருத்தமப்பனார் தேவராஜதோழப்பருடைய தீர்த்தம் வர (திருவத்யயனம்) அற்றைக்கு சிற்றண்ணர் தேவியரானஆச்சியார் தளிகைப் பிரசாதங்களை பண்ணினார்.*

*அன்றிரவு திருவத்யயனத் தளிகை கைங்கர்யம் எல்லாம் நிறைவேறி ஆச்சியார் படுக்கையிலே சாயும்போது "ஜீயர் திருவடிகளே சரணம், பிள்ளை திருவடிகளே சரணம், வாழி உலகாசிரியன்" என்று திருநாமங்களைச் சொல்லிக் கொண்டு சயனத்திட, வெளியிலே எழுந்தருளியிருந்த அண்ணனும் அவருடைய திருத்தம்பியார் கந்தாடையப்பனும், திருக்கோபுரத்துநாயனாரும் இவ்வாறு ஆச்சி கூறக்கேட்டு "மதனியாரே" என்று அழைக்க, ஆச்சியாரும் எழுந்திராததனால் அவர்கள் மதனியாரை எழுப்ப வேண்டாம் என்று தீர்மானித்து, அம்மூவரும் நித்திரை கொண்டார்கள்.*

*49. சிங்கரையர் என்பார் 'வள்ளுவராஜேந்தரம்' என்ற ஊரிலிருந்து காய்கறிகளை ஜீயர் மடத்திற்கு கொண்டு சமர்ப்பித்திடுவார். அவருடைய ஆத்ம சுத்தியைப் பரிசோதித்த மணவாளமாமுனிகள், அவர் கொண்டு வந்த காய்கறிகளை அங்கீகரித்தருளி 'கோயிலுக்குப் போய் பெரிய பெருமாளை ஸேவித்துவாரும்' என்று விடை கொடுத்தருளினார்.*

*அவரும் அவ்வாறே பெரிய பெருமாளை ஸேவித்தபிறகு இல்லம் திரும்பிட அன்று இரவு ஸ்வப்னத்தில், பெரிய பெருமாள் ஸந்நிதியிலே திருமணத்தூணருகே நின்று சிங்கரையர் ஸேவித்துக் கொண்டிருக்க, பெரிய பெருமாள் அணையில் வைத்த திருக்கையை உயரவெடுத்துத் திருவனந்தாழ்வானைக் காட்டி "இவர் கிடாய் அழகிய மணவாளச்சீயர், இவரோடு சம்பந்தம் உண்டாக்கிக் கொள்" என்றருளிச் செய்ய, இந்த ஸ்வப்னத்தைக் கண்டு, அதனால் ஜீயர் திருவடிகளில்ஆச்ரயிக்கக் காத்திருக்கிறேன் என்று சிங்கரையர் கந்தாடை அண்ணனிடம் விண்ணப்பஞ் செய்தார்.*

*50. இந்த நிகழ்ச்சிகளைகந்தாடை அண்ணன் கேட்டருளி நெடும்போதும் சிந்தித்துக் கொண்டு திருப்படுக்கையிலே சாய்ந்தருளியிருக்கிற வேளையிலே, எம்பெருமானார் திருமேனியாலே ஸேவை ஸாதித்து "நாமே அனந்தாழ்வான், நாமே வரவரமுனி, அந்த அழகியமணவாள ஜீயர் திருவடிகளிலே நீரும் உம்முடைய ஸம்பந்திகளும் ஆச்ரயித்து உஜ்ஜீவியுங்கோள்" என்று கூறக்கேட்டு அதன்படியே நமக்கு நல்விடிவாயிற்று என்று எண்ணிக்கொண்டு மதனியாரான ஆச்சியார் அருகே சென்று தண்டனிட்டு அவர் பயப்படாதபடிக்கு முந்துற ஸ்வப்ன வ்ருத்தாந்தத்தை அருளிச்செய்ய, தமக்கு ஜீயர் ஸம்பந்தம் உண்டானபடியையும் அதற்கு மூலபூதமான ஜீயருடைய பாதுகாதீர்த்த வைபவத்தையும், தம்முடைய திருத்தமப்பனாரான அப்பாவுக்கு ஜீயர் நீராடியருள, அந்த தீர்த்தத்திலே நீராடியதால் வந்த சேஷத்வஜ்ஞானத்தையும் ஆச்சியார் கூற, கோயிலண்ணன் கேட்டருளினார். கோயிலண்ணனும் ஜீயர் திருவடிகளிலேஆச்ரயித்திட அவரும் கோயிலண்ணனுக்கு பஞ்ச ஸம்ஸ்காரங்களைச்செய்தருளினார்.*

*(இன்னும் வரும்)*

# INTRODUCTION TO SRIVAISHNAVAM

**Velukkudi Sri U Ve Ranganathan Swamy**

I welcome you all to this new series titled 'Introduction to Srivaishnavam'. I consider myself fortunate to have gotten this opportunity



to write about our everlasting and evergreen Srivaishnava Sampradaya. While the thought of presenting an unfathomable subject to a scholarly audience does humble me, I am also enthused considering the array of delectable topics that we shall delve into, in the course of this series. It is with these two conflicting emotions that I undertake this task, praying to our illustrious lineage of Acharyas to lead it to completion. In this first article, we will take a look at the etymology of the word Srivaishnavam in order to define the subject of our study and also identify what we plan to achieve through this series.

**Who is Vishnu?**

Sriman Narayana is known to take the form of worldly beings from time to time in order to destroy evil forces and restore the rule of Dharma in the Universe. We refer to these Incarnations as 'Avataaras' (Descents), since He descends into this world from His eternal abode of Srivaikuntham. In order to rescue someone who has fallen into a deep well, the rescuer must first jump into the well himself and aid the other person climb out of it. Similarly, Bhagavan, who desires to save each and every one of us trapped in this deep Samsaara, descends into this world time and again and aids us on our journey to Mukti in many ways. We also referred to these as 'VibhavaAvataaras'. Vibhava means Power, Magnificence, Supremacy and Wealth. These Avataaras are an outcome and a display of these and many more auspicious qualities of

Sriman Narayana, giving them the name 'VibhavaAvataaras'.

While the Dasha Avataaras (Ten Prominent Incarnations) are popularly known and celebrated, there are more than 40 incarnations of Bhagavan that are detailed in the Puranas. The foremost amongst these is the incarnation of Sriman Narayana as 'Vishnu'. In the SahasranaamaStotram, after listing the Divine Names of the 'Vyuha' form, Bhishmacharya begins singing the Divine

Names of VibhavaAvataaras by first citing the 6 Names of the Vishnu Avataara beginning with 'Jagadaadija'. This Naamam means 'He who is born as one amongst the three deities who are the cause of this Universe'. It is well known that Brahmaa, Vishnu and Rudra are the Trinity that Create, Sustain and Destroy this Universe. Vishnu, who is one amongst the Trinity, is none other than the first incarnation of Sriman Narayana.

The term 'Vishnu' is derived from the Sanskrit verbal root 'Vish' which means 'to pervade'. Therefore, the name Vishnu refers to One who pervades this whole Universe and resides within each and every entity in it, be it sentient (like the Jivatma / Chetana) or non-sentient (like the worldly objects / Achetana). This too is an attribute that is unique to Sriman Narayana, making Narayana and Vishnu one and the same.

**Who is a Vaishnava?**

The term 'Vaishnava' means 'one who worships Vishnu as God'. It refers to those who feel a sense of belonging and intimacy to Lord Vishnu. Since Sriman Narayana (Vishnu) is a Sattvik Deity, Vaishnavas who are His followers must also be Sattvik and strive to develop Knowledge, Devotion, Humility and Kindness. It is for this reason that Vaishnavas are held in great esteem in the Puranas and Smritis, like in the following Puranic Verse which extolls their character.

**समात्मा सर्वजीवेषु निजाचारादविप्लुतः।**
**विष्ण्वर्पिताखिलाचारः स हि वैष्णव उच्यते॥**

samâtmâ sarvajîvesu nijâcârât aviplutah|
visnvarpitâkhilâcârah sa hi vaisnava ucyate ||

(One who views all beings in this world as equals, is unswerving from his customs and good conduct and has offered all his acts to Lord Vishnu is said to be a Vaishnava).

We too, as Vaishnavas, must make an effort to gain these essential qualities.

· Equality - Vishnu resides within every being in this world and so it is unfair to view or treat any soul as being lesser than another. All beings deserve the same basic respect and compassion irrespective of their species, body or value.
· Conduct - All customs and deeds prescribed in the Vedas and Shastrams are a form of obeisance to Vishnu, who is our Master. Therefore, we

must perform them to the best of our ability solely for the pleasure of Vishnu; not for meagre results.

- Surrender - Vishnu guides us from within in all our acts and is also the beneficiary of all the services that we perform. Therefore, we must realise that there is no place for arrogance in the activities that we perform and so must surrender ourselves to Bhagavan.

**What is Srivaishnavam?**

Vaishnavam is an ancient tradition and is counted as one of the six major religions of Bhaarata Desha, the others being Shaivam, Shaaktam, Sauram, Kaumaram and Gaanaapatyam which worship Shiva, Shakti, Surya, Kumaara (Skanda) and Ganapati respectively. Vaishnavam is an overarching tradition which has many schools and subsects within it. The Dvaita School of Madhvacharya, Gaudiya Vaishnavism, the Ramananda Sampradaya, the Pushti Sampradaya of Vallabhacharya, the Chaitanya Sampradaya, the Swamy Narayana Sampradaya and many more come under the ambit of Vaishnavam. One of the oldest and most prominent Vaishnava Sampradayams is the SrivaishnavaSampradayam, with Bhagavad Ramanuja as it's foremost preceptor. Although Srivaishnava Tradition has existed since time immemorial, first propounded by Rishis such as Vashishtha, Valmiki and Veda Vyasa and later elucidated in Tamil by the Azhvars, it was Bhagavad Ramanuja who codified the teachings of this School comprehensively. He also combined the Vishishtadvaita Philosophy and the Vaishnava Tenets to synthesize a simple yet remarkably profound way of life that we celebrate as Srivaishnavam today. The prefix 'Sri' in the name Srivaishnavam indicates sacredness or reverence, just as when it is added as a prefix to the names of people. There is a popular misconception that this word refers to Goddess Mahalakshmi and so Sri Vaishnavam is the worship of both Goddess Mahalakshmi and Vishnu, setting it apart from other Vaishnava traditions which do not ascribe as much importance to a female deity. However, while the worship of Mahalakshmi and Her prominence are undisputed in Srivaishnava Tradition, the word Sri appearing in the name Srivaishnavam is merely an adjective indicating reverence.

Vaishnavas in general, and particularly Srivaishnavas, are often criticized for not being open to the worship of other deities. The argument put forth is that, while the word Vaishnava denotes that Vishnu is one's Deity, it does not

verbally negate the presence or worship of other deities, and so all deities must be worshipped. This age-old criticism has been answered not recently, but in the Padma Purana itself.

साध्वी यथा पतिं नारीणाऽन्यं जानाति तं विना।
जगदीशं तथा नान्यो यदि विष्णुं स वैष्णवः ॥

sâdhvî yathâ patim nârînânyam jânâti tam vinâ |
jagadîsam tathâ nanyo yadi visnum sa vaisnavah ||

(Just as a virtuous woman does not acknowledge any man other than her husband, a Devotee who recognizes no deity other than Vishnu, the Controller of this Universe, is said to be a Vaishnava.)

The intricacy lies in the relationship that a Devotee shares with a Deity. The bond that a Vaishnava Devotee has with Vishnu is said to be that of a wife and her husband, making it intrinsically exclusive. If this relationship had been of a different nature, there would be no qualms in worshipping other deities too, as is the practice in several other faiths.

Why study Srivaishnavam?

It is our good fortune that we have taken birth in the Srivaishnavite Tradition. The Vishnu Dharma Purana states –

जन्मान्तरसहस्रेषु तपोज्ञानसमाधिभिः।
नराणां क्षीणपापानां कृष्णे भक्तिः प्रजायते॥

janmântara sahasresu tapojñânasamâdhibh|
narânâm kskinapâpânâm krisne bhaktih prajâyate ||

(Bhakti towards Krishna is born only in those souls who have annihilated their sins by spending thousands of births in austerities, study and meditation).

We must make the most of this rare opportunity and lead a life which yields peace and satisfaction in this life and ensures salvation from Samsaara and the attainment of eternal bliss in Srivaikuntham in the long run. While most of us might already be observing Srivaishnavite customs from birth, it is important to clearly understand the basic doctrines of the Srivaishnava tradition we belong to, in order to fully appreciate the profoundness of the customs we already practice and also be inspired to start following a few more of them. It is for this purpose that we set out to explore and analyze the Srivaishnava Tradition through this series of articles. Let us pray to the Lord Ranganatha, Ranganayaki Thayar and Bhagavad Ramanuja to guide us on this journey and make this endeavor fruitful. (To be continued)

# ஆசார்ய வைபவம்

கவிரத்நகண்டீரவ, செஞ்சொற்கவி, அபிநவ பட்டர்பிரான்
**ஸ்ரீ உ.வே. T.S. ராஜகோபால ஐயங்கார்**

அவனிமுழுவதுமச்சுதன்தன்வயம்
அவனுமரியதொரெட்டெழுத்தின் வயம்
அவிவிலிம்மனு ஆரியன் வயமெனின்
உவணமுயர்த்தவனிவன்றனுளொடுங்கமே.

உலகம் இறைவனிடத்து ஒடுங்கும்; இறைவன் திருவெட்டெழுத்தில் ஒடுங்குவான்; இம்மந்த்ரம் ஆசாரியன் அளிப்பது; அதனால் இறைவனது நிலை ஆசாரியனாலேயே. இறைவனிடம் நம்மைச் சேர்விப்பதே ஆசாரியனது நோக்கு. ஆதலால் இறைவனை நன்குணர்ந்து அடைவதற்கான திருமந்த்ரத்தை உபதேசிப்பவன் ஆசாரியன். உலகில் வாழ்க்கைக்குப் பூண் கட்டிக்கொள்வதற்கான மற்றைமந்த்ரங்கள் இறைவனைப் பற்றியவேயாயினும், இவற்றை உபதேசம் செய்பவர் ஆசாரியரல்லர்.

ஆசாரியன்அறிவாலும் ஒழுக்கத்தாலும் சிறந்தவன்; வேத நெறிப்படி நடப்பவன்; இறைவனிடம் பக்தி வாய்ந்தவன்; உயிர்களிடம் கருணை மேலிட்டு இவற்றை உய்விக்கும் அரிய சிந்தனை வாய்ந்தவன். மிகத் தாழ்ந்த இரும்பைப் பொன்னாக்க வல்ல ரஸகுளிகை போலே தாழ்ந்தோரை உயர்த்தும் பேராற்றல் வாய்ந்தவன்.

பூமியிலே நமது வாழ்வு, இராவணபவனத்தில் பிராட்டியின் நிலையை யொக்கும். இராவணன் அபிமானித்த அசோகவனம் போலே நமக்கு இவ்வுடம்பு. அவளுக்கு இராவணனது தோற்றம் போலே நமக்கு இவ்வுலகிற் பிறப்பு. அவளுக்கு மாரீசனது தோற்றம் போலே நமக்கு இம்மண் வாழ்க்கையில் ஆசை. அவளுக்கு இன்னல் கருதிய அரக்கியர்கள்போலே நமக்கு அஹங்காரமமகாரங்கள். அவளுக்கு விபீஷணாழ்வானும் அவனது மகளும் போலே நமக்கு ஸ்ரீவைஷ்ணவர்கள். அவளுக்குத் திருவடியின் தோற்றம் போலே நமக்கு ஆசாரியன் வாய்ப்பது. அவளுக்குத் திருவடி வர்ஷித்த ஸ்ரீராமகுணங்கள்போலே நமக்கு ஆழ்வார்களது அருளிச்செயல்களும் ஸ்ரீராமாயணமும் மற்றைய இதிஹாஸபுராணங்களும். அவளுக்குத் திருவடி அளித்த திருவாழி மோதிரம் போன்றது, நமக்கு ஆசாரியன் அளிக்கும் திருமந்த்ரம். அவள் திருவாழியை அணிந்ததும் அதனது நாயகனது திருமேனியை நினைத்து அவனுடன் கலந்ததுபோல் களித்ததையும்ஒக்கும், நாம் திருமந்த்ரத்தை நினைத்து அதற்குள்ளீடானபெருமானைப் பற்றி உய்யநினைப்பது.

நாம் ஆசார்யனதுஉபதேசத்தால் பிராட்டியின் கடாக்ஷத்தைப் பெற்று, அவளது பேரருளால் பெருமானைப் பெறுகிறோம். ஆசாரியனது உபதேசத்தால் சரணாகதரான நமது குறை தீரும்; பிராட்டியாலே சரண்யனான பெருமானின் குறை தீரும்.

ஆசாரியன் தனது முன்னோர்கள் மூலம் பெற்ற அருந்தனமாகிய பேரறிவை நன்கு பரிபாலித்துப்பரப்புவது, சமூகத்திற்குச் செய்யும் பெருந்தொண்டாகும்.நம்மைப் பெற்ற தாய் தந்தையரினும் மேலாவான்ஆசாரியன்; இவர்கள் அழியும் உடலைப் படைக்கின்றனர்; ஆசாரியன் அழியாத ஆத்ம வஸ்துவைக் காப்பாற்றுகிறான். ‘‘ஆசாரியன் சிச்சனாருயிரைப் பேணுமவன்.’’

ஸ்ரீமந்நாதமுனிகள் காலம் முதற்கொண்டு ஸ்ரீமணவாளமாமுனிகள் காலம் வரையில் ஆசாரியர்கள் சமூகத்திற்குச் செய்த தொண்டினையும், ஏற்ற சிஷ்யர்களைத் தேடித் தெள்ளிய ஞானமாகிய அருந்தனத்தைப் பெருக்கி, ஞானசந்ததியை வளர்த்ததையும் நினைத்து அவர்களது திருநாமத்தையும் அவர்கள் ஆற்றிய அருந்தொண்டையும் என்றும் இசைத்தலே நாம் செய்யக்கூடியதாகும். எம்பார், நஞ்சீயர், நம்பிள்ளை முதலிய ஆசாரியர்கள் தங்கள் ஆசாரியர்களிடம் எவ்வாறு பழகி உய்ந்தனர் என்பதை நாம் அவசியம் ஆராய வேண்டும். பூர்வாசார்யர்களைப்போலே இக்காலத்தும் ஆசாரியர்கள் பணியாற்றவும், சிஷ்யர்களாகிய நாம் அவர்களிடத்துப் பெரும் பரிவு கொண்டு, அவர்களது பேரருளைப்பெற்று உய்யுமாறும் ஸர்வேச்வரன் அருள் செய்வானாக.

ஸ்ரீராமாநுஜதாஸோஹம்

# OUR SPONSOR – ADVERTISER



Smt. Sundaravalli



Receiving Best Quality Award



Sri P.M.Srinivasavaradan

Late Sri Pelapur Mupiral Srinivasavaradan (1925–2003) spent his childhood days in the neighbourhood of Prativathi Bhayangaram Sri U.Ve. Annangarachariyar Swamy in Little Kanchipuram. He belongs to Swamy Mudaliandan Thirumaligai and his family deity is "Malarmangai sametha Keerthinarayanan Perumal" of Pelapur near Chengleput.

Having lost his Father at a young age, he migrated to his sister's house in Pune, soon after completing graduation. He worked under a British Engineer in Tata Airline – Mechanical workshop in Pune. He grasped the fundamentals of Mechanical Engineering in his early twenties and after serving 2 very big companies as an Engineer, decided to become an entrepreneur. In Mumbai, he along with a Maharashtrian partner, started a company by name J Mangsun& Co way back in 1964. He got married to Sundaravalli of Triplicane, Chennai, originally from Mannargudi.

J Mangsun& Co has saved crores of foreign exchange for India, by way of developing import substitution Bearing and Pins used in various steel industries. The highlight of his career as an entrepreneur, is getting "Best Quality" award from MICO-Bosche company, a German giant and Smt. Sundaravalli getting award from Maharashtra Chief Minister's wife for being the "Unseen Support" as the wife of the Best Entrepeneur.

Presently, the three sons of Sri Srinivasavaradan, Sri Kulasekhar, Sri Kasturi Rangan and Sri Kesavan are together continuing the family business and exporting engineering goods to Europe and other parts of the world.

Late Sri P M S Varadan, being an ardent 'Sri Vaishnavite', kept the core tradition of our 'sampradaya' as a part of his life, inspite of innumerable hurdles in life. The three sons are also active Sri Vaishnavites. They actively participate in chanting Divya Prabandham, perform daily thiruvaradhanams

as also sing about Alwar-Acharya glory through Namasnkeertanams. Sri Kulasekhar Varadan is presently the Hon General Secretary of the Sabha apart from being a Patron Family Member and both his brothers are Life Members.

They have undertaken to sponsor an advertisement in our 'Ramanuja Dasoham' for the first twelve months. Sabha wishes all the brothers and their families a happy, healthy and contented life.

## APPEAL TO ALL MEMBERS

As you may be aware, our attempt to spread the visibility of the Sabha, thru' association with 'Gitacharyan', will involve additional cost for the Sabha. For this, we look forward to support from our Members and well-wishers.

1. Members can 'Sponsor' an issue of our Magazine, 'Ramanuja Dasoham' on the occasion of any marriage / Sashtiabdapoorthi / Sadabhishekam / Abdapoorthi etc., in their families. This will cost Rs.10000/- per issue. You can also do a part-sponsor by paying a lesser amount.

In addition, you can release or procure advertisements to be released in the magazine at a very nominal cost of Rs. 500/- for Quarter page, Rs. 1000/- for Half Page and Rs. 1500/- for full page of Black and White advertisement.

Members can contact Sri S Raghunathan on adsmrs71@gmail.comfor further information. The amount can be transferred to Sabha's Bank account, as per details given below.

2. As part of our monthly magazine in association with 'Geetacharyan', we propose to start a "SriVaishnava Matrimonial" column. This issue will reach all Geetacharyan magazine subscribers, in addition to our Sabha members.

Members can utilise this facility with a nominal cost of Rs. 100/- for each insertion. The intention is to provide basic details of the prospective bride / bridegroom with contact details like Mobile number and email id. Hence the details of the insertion will be restricted to 30 words.

Members can send their details by email to Sri P Thiruvengadam on mrsmatrimonial1@gmail.com. The amount can be transferred to Sabha's Bank account, as per details given below :

State Bank of India, Chembur Branch, Mumbai – 400071

A/c Name: "SRI BHAGAWAT RAMANUJA SIDDANTHA PRACHAR SABHA"

SB A/c No.: 10339724389 – IFSC : SBIN 0000533

# J. MANGSUN & CO.

JMC BEARINGS

## "JMC BEARINGS"

Manufacturers Of
**TECHNOLOGICAL BEARINGS**

* **Spring (Flexible) Roller Bearings for Hot Rolling Mills**
* **Spring Bush Bearings for CCM**
* **Split Roller Bearings**
* **Multi Row Cylindrical Roller Bearing**
* **Back-Up Bearing for 20 Hi Cold Rolling Mills**
* **Pressure Roller Units (Bearings)**
* **Taper Roller Bearings**
* **UJ Cross Bearings (Cardan Drive Bearing)**
* **Planet Gear Pins for WIND GEAR BOX/ Transmission**

***Industries: Steel / Metal / Cement / Power Plants***



**MR. K P VARADAN – DIRECTOR**
**MOBILE: +91 98694 41127**

**Address:**
**J. MANGSUN & CO.**
**Plot No. A - 483, Road No. 24, Wagle Industrial Estate,**
**THANE - 400 604. MAHARASHTRA.**
**Tel : 022 – 4064 2128 / 4064 2148 / 4064 2100**
**Website : www.jmangsun.com**
**E-mail : kp.varadan@jmangsun.com**

# திருமங்கையாழ்வாரும் திவ்யதேசங்களும்

**(56) திருப்பேர் நகர்.**

திருவரங்கத்திற்கு அடுத்தபடியாகத் திருப்பேர் நகரைத் திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம் செய்துள்ளார். இத்தலம் தற்போது கோயிலடி என்று வழங்கப்பெறுகிறது. உபமந்யு எனும் அரசனிடம் 'ஒரு குடம் அப்பம் வேண்டும்' என்று எம்பெருமான் கேட்டுப் பெற்று மகிழ்ந்தபடியால் இத்தலத்து எம்பெருமானுக்கு 'அப்பக் குடத்தான்' என்ற பெயர் ஏற்பட்டது. இவ்வெம்பெருமானைப் பத்துப் பாசுரங்களால் வாயாரப் பேசி மகிழ்கிறார் திருமங்கையாழ்வார்.

கையிலங்காழி சங்கன் கருமுகில் திருநிறத்தன்
பொய்யிலன் மெய்யன் தன்தாள் அடைவரேல் அடிமையாக்கும்
செய்யலர் கமலமோங்கு செறிவயல் தென்திருப்பேர்
பையரவணையான் நாமம் பரவிநானுய்ந்தவாறே.

திருவாழி திருச்சங்குகளை உடையவனும், காளமேகம் போன்ற திருநிறத்தை உடையவனும், சாத்திரங்களில் கூறப்பட்ட பெருமைகளில் பொய்யில்லாதவனும், தன் அடியவர்கள் திறத்தில் மெய்யாக இருப்பவனும், தன்திருவடிகளில் பணிபவர்களை அடிமை கொள்பவனும், மலர்ந்த தாமரைகள் உயர்ந்திருக்கப்பெற்ற கழனிகளையும் அடர்ந்த சோலைகளையும் உடைய தென்திருப்பேர் நகரில் ஆதிசேஷன்மீது எழுந்தருளி யிருப்பவனுமான எம்பெருமானை நான் கூறி உய்ந்தபடிதான் என்னே! என்கிறார்.

உலகமெல்லாம் உண்டுமிழ்ந்தவன்; பிரமனைத் தன் உந்தியில் படைத்து, சிவனுக்கு ஏற்பட்ட சாபத்தை நீக்கியவன்; கபாலியாகத் திரிந்த சிவனுடைய துயர் தீரும்படியாக வியர்வைநீரைத் தந்தவன்; தேவதைகளின் பிரார்த்தனைக்கு இணங்கி, இரணியனை அழித்தவன்; சீதைப்பிராட்டிக்காகக் கடலை அடைத்து இராவணனின் இருபது புயங்களைத் துணித்தவன்; வெண்ணெய் உண்டதனால் கோபம் கொண்ட யசோதை, கோபம் கொண்டு, கயிற்றினால் கட்ட, இசைந்திருந்தவன்; நப்பின்னைப் பிராட்டிக்காக ஏழு எருதுகளைக் கொன்றவன்; திருப்பேர்நகரில் ஆதிசேஷன்மீது பள்ளிகொண்டிருப்பவன் என்றெல்லாம் எம்பெருமானைப் போற்றுகின்றார்.

சந்திரமண்டலத்தளவும் ஓங்கி வளர்ந்த சோலைகளை உடையது; பெரிய மலைகள் போன்ற திருமதில்களால் சூழப்பெற்றது; நல்லொழுக்கம் உடையவர்களாய், நான்கு வேதங்களிலும் வல்லவர்களான அந்தணர்கள் வேதங்கள் ஓதிக்கொண்டிருக்க, அவ்வொலியைக் கேட்டு, மீன்கள் அஞ்சியோடுகின்ற கழனிகளை உடையது; திடமானவையும், செம்பொன்னால் ஆனவையுமான மதிள்களாலே சூழப்பெற்றது; மீன்கள் துள்ளி விளையாடப்பெற்ற வயல்களை உடையது என்று ஊரின் சிறப்பையும் ஆழ்வார் வருணிக்கின்றார். திருப்பேர் நகரையும் திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் மற்றும் சில தனிப் பாசுரங்களிலும் , திருக்குறுந்தாண்டகம் , திருநெடுந் தாண்டகம் , சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய ஐந்து திவ்யப்பிரபந்தங்களிலும் குறிப்பிட்டுள்ளார்.

(57) நந்திபுர விண்ணகரம்

திருப்பேர் நகருக்கு அடுத்தபடியாக நந்திபுரவிண்ணகரம் எனும் திருத்தலத்தை ஒருபதிகத்தால் மங்களாசாஸனம் செய்துள்ளார். கும்பகோணத்துக்கு அருகில் உள்ள இந்த திவ்ய தேசம் தற்போது நாதன்கோயில் என்று வழங்கப்பெறுகிறது. நந்திவர்ம பல்லவன் எனும் அரசன் திருப்பணி செய்து உருவாக்கிய கோயிலாதலின் நந்திபுர விண்ணகரம் எனப் பெயர் பெற்றது என்பர். இத்தலத்து எம்பெருமானுடைய பெருமைகளைப் பலவாறு கூறி, நந்திபுரவிண்ணகரத்தை நெஞ்சே அடைந்திடுவாயாக என்று திருமங்கையாழ்வார் கூறுகிறார். இப்பதிகம் மிக அழகிய சந்தத்தில் அமைந்துள்ளது சுவைத்தின்புறத்தக்கது.

தீதறு நிலத்தொடு எரிகாலினொடு நீர்கெழு விசும்பு மவையாய்
மாசறு மனத்தினொடுறக்கமொடிறக்கை அவையாய பெருமான்
தாய் செறவுளைந்து தயிருண்டு குடமாடு தடமார்வர் தகைசேர்
நாதன் உறைகின்ற நகர் நந்திபுர விண்ணகரம் நண்ணுமனமே.

'சேதனர்க்கு போக மோக்ஷங்களை விளைக்க வல்லதாய், குற்றமற்ற நிலம், நீர், காற்று, நீர், இவற்றுக்கெல்லாம் இடம் கொடுக்கும் ஆகாசம் ஆகிய ஐந்து பூதங்களுக்கு அந்தராத்மாவாய், குற்றமற்ற மனத்தோடு விழிப்பு, சுவை இவற்றோடு கூடிய மரணம் ஆகிய இவற்றுக்கு நிர்வாஹகனான ஸர்வேச்வரனாய், தாயான யசோதை கோபிக்க அதற்கு அஞ்சியும், மனம் குழைந்தும் தயிரை அமுது செய்து கூத்தாடியவனாகிய பெருமானுடைய இடம் நந்திபுர விண்ணகரம் என்ற திவ்ய தேசம். ஓ நெஞ்சே இதைக் அடையப் பாராய்' என்று திருமங்கையாழ்வார் தம்முடைய மனத்தைக் குறித்து அருளிச் செய்கிறார். இப்பாசுரத்தில் 'நாதன் உறைகின்ற நகர்' என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளதை அடியொற்றியே இத்தலத்திற்கு நாதன் கோயில் என்ற பெயர் வழங்கி வருகின்றது போலும்! நந்திவர்மன் எனும் அரசன் திருப்பணி செய்த கோயில் என்பதையும் ஆழ்வார் ஒரு பாசுரத்தில் அருளிச்செய்கிறார்:

தந்தைமனம் உந்துதுயர் நந்த விருள்வந்த விறல் நந்தன் மதலை
எந்தையிவனென்று அமரர் கந்தமலர் கொண்டு தொழநின்ற நகர்தான்
மந்தமுழவோசை மழையாகவெழுகார் மயில்களாடு பொழில் சூழ்
நந்தி பணிசெய்த நகர் நந்திபுர விண்ணகரம் நண்ணுமனமே.

தகப்பனான நந்தகோபனுடைய மனத்தை வருத்துகின்ற துன்பம் தொலையும்படி இருளிலே ஆய்ப்பாடிக்கு வந்து சேர்ந்த நந்தகோபன் மகனான கண்ணபிரான் 'இவனே எமக்குத் தலைவன்' என்று தேவர்கள் மணம்மிக்க பூக்களைக் கொண்டு அடையும்படியாக எழுந்தருளியிருக்கும் திவ்யதேசமானது, முழவங்களின் ஒலியை மேகங்களுடைய இடியாகக் கருதி, மயில்கள் கூத்தாடுமிடமான சோலைகளால் சூழப் பெற்றதும், நந்தி எனும் அரசன் வந்து பணிந்ததுமான நந்திபுர விண்ணகரமாகும் என்கிறார் திருமங்கையாழ்வார்.

உலகையெல்லாம் உண்டுமிழ்ந்தவன்; அசுரர்களை அழித்தவன்; இலக்குமணனோடும், சீதையோடும் காட்டிற்குச் சென்றவன்; முனிவர்களால் துதிக்கப் பெறுபவன் என்று இத்தலத்து எம்பெருமானைப் பலவாறு போற்றுகின்றார்.

அழகிய வண்டுகள் தேனைப் பருகி, நைவளம் என்ற பண்ணைப் பாடுகின்றது; புதிதாக மலர்கள் மலர்ந்த சோலைகளில், தும்பிகள் திரியப்பெற்றது; அழகிய சிறகுகளை உடைய மயில்களும், குயில்களும் சேர்ந்து வாழப்பெற்ற அழகிய சோலைகளை உடையது; குயில்களின் கூவுதலுக்கேற்ப மயில்கள் நடனமாடப்பெற்றது; 'பூவுலகில் இதுபோன்றதொரு நகரம் மற்றொன்று இல்லை' என்று தேவர்களால் கொண்டாடப்பெற்றது என்று இத்தலத்தின் சிறப்புகளையும் திருமங்கையாழ்வார் அருளிச் செய்துள்ளார்.

(58) *திருவிண்ணகர்*

நந்திபுர விண்ணகரத்திற்கு அடுத்தபடியாகத் திருவிண்ணகர் எனும் திருத்தலத்தைத் திருமங்கையாழ்வார் மூன்று பதிகங்களால் பாடியுள்ளார். இத்தலத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானுக்கு ஒப்பிலி அப்பன் (ஒப்பு இல்லாதவன்) என்ற திருநாமம் உள்ளது பற்றி, இத்தலம் ஒப்பிலியப்பன் ஸன்னிதி என்றே வழங்கப்பட்டு வந்தது. தற்போது அது மருவி உப்பிலியப்பன் ஸன்னிதி என்று வழங்கப்பட்டு வருவதோடல்லாமல், இப்பெயருக்கேற்ப, இத்தலத்து எம்பெருமான் அமுது செய்யும் பிரசாதங்களில் உப்பு சேர்ப்பதில்லை. இத்தலத்தைப் பற்றி அருளிச்செய்துள்ள மூன்று பதிகங்களுள் முதல் பதிகத்தில் 'திருவிண்ணகரப்பனே! ஸம்ஸாரத்தில் எனக்கு உண்டான வெறுப்பு அளவற்றது; இனி என்னை இந்நிலத்தில் என்னை நீ வைத்திருக்கத் தகாது' என்று விண்ணப்பம் செய்கிறார்.

அண்ணல் செய்து அலைகடல் கடைந்தவனே அதனுள்
கண்ணுதல் நஞ்சுண்ணக் கண்டவனே
விண்ணவர் அமுதுண அமுதில் வரும்
பெண்ணமுதுண்ட எம்பெருமானே
  ஆண்டாயுன்னைக் காண்பதோர் அருளெனக்கருளுதியேல்
  வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே.

தானே தலைவன் என்பதைக் காட்டிக் கொண்டு, அலையெறிகின்ற கடலைக் கடைந்து அக்கடலிலிருந்து தோன்றிய நஞ்சை நெற்றிக்கண்ணனான சிவன் உண்ணும்படி செய்தவனே! தேவர்கள் அமுதத்தைக் குடியா நிற்க, அந்த அமுதத்தில் ஸாரமாக உண்டானவளான திருமகளாகிய அமுதத்தை அனுபவிக்கப் பெற்ற எம்பெருமானே! அடியேனை ஆட்கொண்ட பெருமானே! திருவிண்ணகரில் எழுந்தருளி யிருப்பவனே! உன்னை நான் சேவிக்கும்படியாக எனக்கு அருள் செய்வாயானால், இனி உலக வாழ்க்கையை நான் விரும்பமாட்டேன் – என்று இப்பாசுரத்தில் அருளிச் செய்கிறார். இப்பதிகத்தல் ஒன்பது பாடல்களிலும் ஈற்றடி "ஆண்டாய் உன்னைக் காண்பதோர் அருள் எனக்கு அருளுதியேல் வேண்டேன் மனை வாழ்க்கையை விண்ணகர் மேயவனே" என்றே அமைந்துள்ளது. இப்பதிகம் வஞ்சி விருத்தத்தால் அமைந்ததாகும்.

அடுத்ததான இரண்டாவது பதிகத்தில் தாம் நெடுங்காலம் உலகில் உழன்று கிடந்தபடியையும், பற்பல பாவங்களைச் செய்து போந்தபடியையும், அதற்குரிய பலன்களை அனுபவிப்பதற்கு அஞ்சுகின்றபடியையும், விண்ணப்பித்து, தன்னை ஏற்றுக் கொள்ளவேண்டுமெனத் திருவிண்ணகர் எம்பெருமான் திருவடிகளில் இறைஞ்சுகிறார்.

மறந்தேன் உன்னை முன்னம் மறந்த மதியின் மனத்தால்
இறந்தேன் எத்தனையும் அதனால் இடும்பைக் குழியில்
பிறந்தே எய்த்தொழிந்தேன் பெருமான் திருமார்பா
சிறந்தேன் நின்னடிக்கே திருவிண்ணகர் மேயவனே

எப்போதும் நினைக்கத் தகுந்த உன்னை மறந்தொழிந்தேன். இப்படி மறந்தோமே என்ற வருத்தமும் இல்லாத மனத்தால் மிகவும் தாழ்ந்தவனாய்க் கெட்டுப் போனேன். ஆகையால் துன்பத்திற்கே இருப்பிடமான கர்ப்பக் குழியில் இடைவிடாத பிறப்பும் இறப்புமாகத் துன்பப் பட்டேன். திருமகளை மார்வில் உடையவனே! திருவிண்ணகரில் எழுந்தருளியிருப்பவனே! உனது திருவடிகளுக்கே இப்போது நான் தகுந்தவனாக அமைந்திருக்கிறேன் – என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்கிறார். இதேபோல் இப்பதிகம் முழுவதும் தம்முடைய தாழ்வைச் சொல்லியும் எம்பெருமானுடைய உயர்வைச் சொல்லியும் அவன் திருவடிகளைப் பற்றுகிறார்.

அடுத்ததாக மூன்றாம் பதிகத்தில் இவ்வுலக வாழ்க்கையில் தாம் பட்ட துன்பங்களையெல்லாம் தீர்த்து, எம்பெருமானுடைய திருவடிகளில் கைங்கர்யத்தைக் கொடுத்தருளவேண்டும் என்று வேண்டுகிறார்.

சொல்லாய் திருமார்வா உனக்காகித் தொண்டு பட்ட
நல்லேனை வினைகள் நலியாமை நம்பு நம்பீ
மல்லா குடமாடீ மதுசூதனே உலகில்
செல்லா நல்லிசையாய் திருவிண்ணகரானே

மிடுக்கு உடையவனே! குடக்கூத்தாடியவனே! மது எனும் அரக்கனைக் கொன்றவனே! உலகிலில்லாத உயர்ந்த புகழை உடையவனே! பரிபூரணனே! திருமகளை மார்வில் உடையவனே! அடியேனுக்கு மறுமொழி கூறவேண்டும். உனக்கு அடிமை பூண்ட நல்லவனான என்னைப் பாவங்கள் துன்புறுத்தாதபடி அருள் செய்ய வேண்டும் – என்று இப்பாசுரத்தில் வேண்டுகிறார்.

இவ்வாறு திருவிண்ணகரைப் பற்றிய மூன்று பதிகத்திலும், இவ்வுலக வாழ்க்கையின் துன்பங்களையும், அதில் தாம் உழன்று பாவங்களைச் சேர்த்தபடியையும், அப்பாவங்களிலிருந்து தன்னைக் காப்பாற்றி, எம்பெருமானுடைய திருவடிகளில் தொண்டு புரியும் பாக்கியத்தைத் தாம் பெறவேண்டும் என்ற ஆவல் தமக்கு உள்ளபடியையும் திருவிண்ணகர் எம்பெருமானிடம் விண்ணப்பிக்கிறார்.

கீதாசார்யன் ஆசிரியர் ஸ்ரீவேங்கடேச்வரா பக்தி தொலைக்காட்சியில் (SVBC 2) தினந்தோறும் காலை 6.00 மணிக்கு வழங்கி வரும் **ஆசார்யர் அமுதம்**, பொதிகைத் தொலைக்காட்சியில் தினந்தோறும் காலை 6.30 மணிக்கு வழங்கிவரும் **நாள்தோறும் நாலாயிரம்** ஆகியவற்றின் அனைத்துப் பதிவுகளையும் youtube.comல் எப்போது வேண்டுமானாலும் பார்க்கலாம்.

# கூந்தல் காரணம்

## T.C.A. வேங்கடேசன்

தமிழ் இலக்கணத்தில் பெண்களுக்கு ஏழு பருவங்கள் கூறப்பட்டுள்ளன. அவையாவன – பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகியவையாகும்.

இச்சொற்களை ஆழ்வார்கள் நாச்சிமார்கள் விஷயமாகவும், நாயகி பாவத்தில் தலைவி விஷயமாகவும், தாய் மற்றும் தோழி விஷயமாகவும் பயன்படுத்தியுள்ளனர்.

அப்படிப் பெண்களையோ, பெண் தன்மை அடைந்தோரையோ குறிக்கும் போது அவர்கள் அழகினைப் பரக்கப் பேசுவதையும் காண்கிறோம். அவயவங்களின் அழகைப் பேசுமிடத்தில் அவர்கள் கூந்தல் அழகைப் பற்றியும் பேசுகின்றனர் ஆழ்வார்கள்.

அழகிய கூந்தலுக்கு ஐந்து வகையான அடையாளங்கள் அவசியமானது. திருவெழுகூற்றிருக்கையென்னும் ப்ரபந்தத்தில் திருமங்கையாழ்வார் "ஐம்பால் ஓதி" என்கிறார். இதையே பெரிய திருமொழியில் "அஞ்சல் ஓதி" என்றும் காட்டுகிறார். ஓதி என்பது கூந்தலைக் குறிக்கும்.

இந்த ஐந்து லக்ஷணங்களாவன, மென்மை, கருமை, நெடுமை, நறுமணம், குளிர்த்தி என்பனவாம். இவற்றை மென்மை, அடர்த்தி, நறுமணம், சுருண்டிருத்தல், நெய்த்திருத்தல் என்றும் கூறுவர்.

கருமையைக் காட்டும் வண்ணமாக கருமலர்க் கூந்தல், கருங்குழலாள் போன்ற ப்ரயோகங்கள் உள்ளன.

அடர்த்தியையும் மென்மையையும் சேர்த்து நெறிமென்குழல் என்று கூறுகிறார் ஆண்டாள் தம்முடைய நாச்சியார் திருமொழியில்.

நெடுமையைக் கட்டும் விதமாக அவரே தாழ் குழலாள் என்கிறார்.

நறுமண குணமானது நறுங்குழல் என்றும், கந்தம் கமழும் குழல் என்றும், வெறியார் கூந்தல் என்றும், வம்புலாம் கூந்தல் என்றும் காட்டப்பட்டிருக்கிறது.

இப்படியே சுரிகுழல் என்றும், சந்தமர் குழல் என்றும், சூழ்குழல் என்றும், வார்குழல் என்றும் பல உள்ளன.

கூந்தல் முடிந்திருப்பதே அழகெனினும் அவ்வாறு இராமலிருக்கும் மாதர் பின்னும் ஆடவர் நெஞ்சம் செல்லும் என்பதை விரிகுழலாரில் பட்டு என்கிறார் தொண்டரடிப்பொடி யாழ்வார் தம்முடைய திருமாலையில்.

மேலும் பெண்கள் தங்கள் கூந்தலிலே மலர் சூடிக் கொள்வதையும் இவ்வர்ணனைகளில் பலவிடங்களில் காண்கிறோம். இவ்வாறு மலராள் கூந்தல் என்றும், மாமலர்க் கூந்தல் என்றும், மலர்க் கூந்தல் என்றும், பூங்குழல் என்றும், மலர்க்குழல் என்றும் ப்ரயோகங்கள் உள்ளன.

கூந்தலின் மணம், அவற்றில் உள்ள பூக்கள் இவற்றால் வண்டுகள் வந்து படியும் என்பதையும் வண்டார் கூந்தல் என்றும், வண்டு முரல் கூந்தல் என்றும், அறுபதமுரலும் கூந்தல் என்றும் ஆழ்வார்கள் காட்டியுள்ளனர்.

இவ்வடையாளங்களைச் சேரப்பிடித்து குலசேகர ஆழ்வார் புரிகுழல் என்கிறார் தம்முடைய பெருமாள் திருமொழியில்.

இதற்கு எதிர்தட்டாக, பூதனையை "வெந்தழல் போல் கூந்தலாள்" என்கிறார் திருமங்கையாழ்வார்.

ஆழ்வார்களும் நாச்சிமார்களும் மைவண்ண நறுங்குஞ்சிக் குழலுடைய ப்ரசஸ்த கேசனான சௌரிராஜப் பெருமான் கேசத்துக்குத் தக்க கூந்தலை உடையவர்களாகிறார்கள். அதனாலேயே

அவர்கள் குழலழகு இவ்வண்ணமாக வர்ணிக்கப்படுகிறது. விரிவுக்கஞ்சி நிறுத்துகிறோம். இது நிற்க.

பெண்களின் அழகுக்குக் காரணமாம் இக்கூந்தலையிட்டே அவர்களைச் சொல்வதும் ஓர் இலக்கணக் குறிப்பாம்.

ஐம்பால் ஓதி என்றவிடத்து ஓதி என்பது குழல் என்றாலும், நாச்சியாரை ஓதி என்றே அழைக்கிறார் திருமங்கை ஆழ்வார். (ஓதியை உடையவள் என்பது பொருள்.)

நப்பின்னைப் பிராட்டியை அறுபதமுரலும் கூந்தல் என்றும், அவள் காரணமாக ஏழு எருதுகளை எம்பெருமான் அடக்கினான் என்கிறார் இவ்வாழ்வார்.

நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் "கோலம் திகழ் கோதை என் கூந்தலுக்கே" என்று பாடியிருக்கிறார்.

ஆக பெண்களின் அழகின் ஓர் அங்கமான குழற்கற்றையானது அவர்களை இட்டழைக்கும் சொல்லாகவே மாறிவிடுகின்றது என்று பார்க்கிறோம்.

இது போல பிறவும் உண்டென்று கண்டு கொள்க.

இன்னொரு அழகான ப்ரயோகமும் காட்டுகிறார் பூதத்தாழ்வார்.

இரண்டாம் திருவந்தாதி பாசுரம் **93**:

கடிது கொடுநரகம் பிற்காலும் செய்கை
கொடிதென்று அது கூடா முன்னம் – வடிசங்கம்
கொண்டானைக் கூந்தல்வாய் கீண்டானை கொங்கை நஞ்சு
உண்டானை ஏத்துமினோ உற்று

நரகம் சேரா வகைக்கு எம்பெருமானையே பற்றுங்கோள் என்று சொல்லும் ஆழ்வார், அவனைக் கூந்தல் வாயைக் கீண்டவன் என்கிறார். இது எப்படிச் சேரும் என்பது கேள்வி.

கூந்தலுக்கு வாய் என்றும் ஒன்றுண்டா? குழல் என்பது புல்லாங்குழலுக்கும் சேரும் என்பதால் குழல் வாய் என்று கூறுவதுண்டு. அதைக் கொண்டும் திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் "துளையார் கருமென் குழல்" என்கிறார். அதாவது, துளைகளை உடைய புல்லாங்குழல், குழல் என்ற சொல்லால் கூறப்படும் கூந்தல், அதை உடைய ஆய்ச்சியர் என்பதாம். அல்லது, பெண்கள் கூந்தலைப் பின்னிக் கொள்ளும் போது ஏற்படும் துளைகளையோ, அல்லது அது சுருண்டிருப்பதால் ஏற்படும் துளைகளையோ கூறுகிறார் என்னவுமாம்.

என்றாலும், கூந்தலின் வாயை எம்பெருமான் கிழித்தான் என்பது எப்படி என்ற கேள்வி எழுகின்றது. கேண்மின்.

கூந்தல் என்ற பதம் இங்கே குதிரை என்னும் விலங்கைக் குறிக்கும். எப்படியெனில் – குதிரைக்கும் சிங்கத்துக்கும் பிடரி என்ற கூந்தல் அசாதாரணமான ஏற்றமாகும். அந்தக் கூந்தலையுடைத்தான குதிரையின் வடிவில் ஓர் அசுரன் கண்ணனைக் கொல்ல வந்தான். அவனுக்குக் கேசி என்பதே பெயர். (வடமொழியில் கேசம் என்பது கூந்தலைக் குறிக்கும்.) அந்த கேசி என்ற அசுரன் வாயைக் கிழித்துக் கொன்றான் எம்பெருமான் என்பது சரித்ரம். இதனையே ஆழ்வார் கூந்தல் வாய் கீண்டான் என்கிறார்.

ஆக, இங்கே ஆழ்வார் காட்டும் சொல் நயமாவது, கூந்தல், கூந்தலால் சொல்லப்படும் கேசம், கேசி என்ற பெயருடைய அசுரன், அந்த அசுரன் குதிரை வடிவில் வந்தான், அல்லது கேசி என்னும் குதிரை வந்தது, அக்குதிரையின் வாயை எம்பெருமான் கீண்டான் என்பதாம்.

இதை வடமொழியில் லக்ஷிதலக்ஷணை என்பர். இதனைத் தமிழில் இலக்கணை என்பர்.

தமிழரும் "கூந்தல் எரிசினம் கொன்றாய்" என்றும், "கூந்தற்குதிரையை வாய்பகுத்திட்டு" என்றும், "கூந்தன்மா கொன்று" என்றும் கூறியுள்ளனர்.

# நல்லபதத்தால் மனை வாழ்வர்

முதுமுனைவர் ம. அ. வேங்கடக்ருஷ்ணன்

நம்மாழ்வார் தம்முடைய திருவாய்மொழியில் பாகவத சேஷத்வம் (அடியவர்க்கு ஆட்பட்டிருத்தல்) என்பதனைப் பற்றி 'நெடுமாற்கடிமை' என்று தொடங்கும் திருவாய்மொழியில் (8–10) பத்துப் பாசுரங்களில் அருளிச்செய்கிறார். முடிவில் இப்பத்துப் பாசுரங்களைக் கற்பவர்களுக்குப் பயன் அருளிச் செய்கின்றபோது "நல்ல பதத்தால் மனை வாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே" என்று அருளிச்செய்துள்ளார். இங்கு 'கொண்ட பெண்டிர் மக்கள்' என்ற ஆழ்வாருடைய அருளிச்செயலை விளக்குகின்ற நம்பிள்ளை "தாங்கள் ஒன்றை நினைக்க, பரிகரம் ஒன்றை நினைக்கையன்றிக்கே ஸபரிகரமாக பாகவதர்களுக்கு உறுப்பாகப் பெறுவர்" என்று அருளிச்செய்துள்ளார். அதாவது, கணவன் ஒன்றை நினைக்க, அதற்கு மாறாக மற்றொன்றை மனைவியோ மக்களோ நினைக்காமல் கணவனுடைய எண்ணத்திற்கு **அனுகூலமாகக் கொண்ட** எண்ணத்தை உடையவர்களாக பாகவத கைங்கர்யம் செய்யும்படியான பேற்றைப் பெறுவர் என்பது கருத்து. இதனை விளக்குவதற்கு ஒரு ஐதிஹ்த்தையும் அருளிச்செய்கிறார் நம்பிள்ளை.

திருக்கோட்டியூரில் வாழ்ந்து வந்த செல்வ நம்பி ஸ்ரீவைஷ்ணவ அடியவர்களுக்குத் தொண்டு செய்வதில் மிகுந்த ஈடுபாடு உடையவர். ஒருமுறை ஸ்ரீவைஷ்ணவர்கள் பலர், திருவனந்தபுரத்திற்கு யாத்திரை செல்லும் வழியில் திருக்கோட்டியூரில் செல்வநம்பியின் திருமாளிகைக்கு வந்து சேர்ந்தனர். அப்போது செல்வ நம்பி வெளியூர் சென்றிருந்தார். அவருடைய மனைவியான நங்கையார் மட்டுமே ஊரில் இருந்தார். வந்திருந்த ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு உணவு படைக்க வேண்டிப் பார்த்தபோது, களஞ்சியத்தில் அரிசி இருக்கவில்லை. விதை நெல் மட்டும் நூறு கோட்டை இருந்தது. நங்கையார், அவ்விதை நெல்லைக் குத்தி அரிசியாக்கி, ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு விருந்து படைத்து விட்டார். மறுநாள் ஊர் திரும்பிய செல்வ நம்பி, விதைப்பதற்காகச் சென்று பார்த்தபோது விதைநெல் சிறிதும் இல்லாததைக் கண்டு தம் மனைவியிடம் வந்து "விதை நெல் அனைத்தும் காணோமே? அவற்றை என்ன செய்தாய்?" என்று கேட்டார். அதற்கு நங்கையார் "அவை அனைத்தையும் நான் விதைத்து விட்டேன்" என்றாள். "எங்கே விதைத்தாய்?" என்று செல்வ நம்பி கேட்க, "பரமபதத்தில் விளையும்படி (அடியவர்களின் திருவயிற்றில்) விதைத்துவிட்டேன்" என்று பதில் கூறினாள். இதைக் கேட்டு செல்வநம்பி மிக மகிழ்ந்தார். 'நெடுமாற்கடிமை' திருவாய்மொழியைக் கற்பவர்கள், அடியவர்களுக்குத் தொண்டு செய்வதில் மனமொத்த தம்பதிகளாய்த் திகழ்ந்த செல்வநம்பியும் நங்கையாரும் போல ஆவர் என்ற கருத்தில் இவ்வைதிஹ்யத்தை நம்பிள்ளை எடுத்துக் காட்டுகிறார்.

அப்படிப்பட்ட ஒரு ஸௌபாக்யம் அடியேனுக்கும் அமைந்தது பகவத் பாகவத ஆசார்ய கடாக்ஷத்தாலேயே ஆகும். அடியேனுடைய பார்யையான ஸ்ரீமதி பூமா அடியேன் செய்து வருகின்ற அனைத்து ஸம்ப்ரதாயப் பணியிலும் உறுதுணையாக இருந்து உதவிகள் புரிந்து

வருவது அனைவரும் அறிந்த ஒன்றாகும். அவளுக்கு இந்த மாதம் அறுபதுபிராயம் நிறைவு பெற்றதையொட்டி ஒரு சில விஷயங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திருக்கடன்மல்லை தீர்த்தகாரரான ஸ்ரீ உ.வே யதீந்த்ரப்ரவணப்ரபாவம் திருமலாசார்ய ஸ்வாமியின் பார்யையான கமலாபட்டு என்பவரோடு, அடியேனை வளர்த்த தாயான ஸ்ரீமதி கிருஷ்ணம்மாவிற்கு நாற்பதாண்டுகளுக்கும் மேலாக மிகவும் நெருங்கிய நட்பு இருந்து வந்தது. அதன் காரணமாக அவர்களுடைய புத்ரிகளில் ஒருவரையே நான் விவாஹம் செய்து கொள்ள வேண்டும் என்று அடியேனுடைய அத்தை விரும்பினார். அதன்படியே அவர்களுடைய புத்ரியான ஸௌபாக்யவதி பூமாவிற்கும் அடியேனுக்கும் 1982ல் விவாஹம் நடைபெற்றது. அப்போது பூமா பி.எஸ்.ஸி படித்து முடித்திருந்தாள். தொடர்ந்து படிக்க ஆசைப்பட்டதால் விவாஹத்திற்குப் பிறகு பி.எட். படித்து முடித்தாள். வைதிக குடும்பத்தில் பிறந்திருந்தபடியால் தாயாரிடமே திவ்யப்ரபந்த பாசுரங்கள், ரஹஸ்யங்கள், ஸ்தோத்ரங்கள் முதலியவற்றில் சில பகுதிகளை, சந்தை முறையில் கற்றுக் கொண்டிருந்தாள். அடியேனைக் கைப்பற்றிய பிறகு, அடியேனும் அவளுக்கு சந்தை முறையில் கற்பிக்கத் தொடங்கினேன்.

ஸ்ரீ உ.வே. சதாபிஷேகம் கோவிந்த நரஸிம்மாசார்ய ஸ்வாமி அடியேனுக்கு பகவத் விஷய காலக்ஷேபம் ஸாதிப்பதற்காக, அடியேனுடைய இல்லத்திலேயே மூன்று வருடங்களுக்கும் மேலாக தேவியாருடன் வந்து தங்கியிருந்தார். அப்போது அவர்களுக்கு வேண்டிய உபசாரங்களை அனைத்தையும் பார்த்துப் பார்த்து செய்தபடியினால் அவர்கள் மிக மகிழ்ந்து ஸ்ரீமதி பூமாவைத் தங்களுடைய மகளாகவே அபிமானிக்கத் தொடங்கினார்கள். அப்போது அவள் ஸ்வாமியிடம் பல விஷயங்களைக் கேட்டு தன்னுடைய ஞானத்தை வளர்த்துக் கொண்டாள்.

பொதுவாகவே கணவனுக்கு அனுகூலமான எண்ணத்தைக் கொண்ட மனைவி என்பது பெரும்பாலும் எல்லா இல்லங்களிலும் உள்ளதுதான் என்றாலும் கணவன் செய்கின்ற எல்லாப் பணிகளிலும் மனைவியின் பங்கும் துணையும் இருப்பது என்பது மிகவும் அரிது. அடியேன் செய்கின்ற ஒவ்வொரு பணியிலும் ஸ்ரீமதி பூமாவின் துணை இருப்பது என்பது தனிப்படக் குறிப்பிட வேண்டியதாகும்.

சென்னைப் பல்கலைக் கழக வைணவத்துறையில் பேராசிரியராகச் சேர்ந்த அடியேன் அங்கு வைணவத்தில் எம்.ஏ. பட்டப்படிப்பை 1987ல் தொடங்கினேன். அதில் அவளைச் சேரச் சொன்னபோது, முதலில் சற்றுத் தயங்கினாலும், பிறகு அதில் சேர்ந்து மிகவும் ஆர்வமுடன் படித்து முதல் மாணவியாகச் தேர்ச்சி பெற்றாள். தொடர்ந்து, அத்துறையின் தலைவராக விளங்கிய பேராசிரியர் டாக்டர். நரஸிம்மாசாரியர் அவர்களிடம் பிஎச்.டி. பட்டப்படிப்புக்கான ஆராய்ச்சி மாணவியாகச் சேர்ந்து மூன்றாண்டுகளுக்கும்மேல் கடுமையாக உழைத்து, 'நஞ்சீயர் ஆற்றிய வைணவப் பணி' என்ற தலைப்பில் ஆராய்ச்சியும் செய்து டாக்டர் பட்டமும் பெற்றாள். அவளுடைய திறமையைக் கண்ட டாக்டர் நரசிம்மாசாரி அவர்கள், வைணவத் துறையில் பகுதி நேரப் பேராசிரியராகவும் பணியாற்ற வாய்ப்பு அளித்தார். ஏறக்குறைய 18 ஆண்டுகள் அப்படிப் பணியாற்றி, பல்கலைக் கழக மாணவர்களுக்குப் பாடம் நடத்தியிருக்கிறாள். ஆக, முதலில் சில ஆண்டுகள் மாணவியாகவும், பிறகு பல ஆண்டுகள்

ஆசிரியராகவும் ஏறக்குறைய 1987 முதல் அடியேன் ஓய்வு பெற்ற 2014ம் ஆண்டு வரை தொடர்ந்து பல்கலைக் கழகத்திற்கும் தினந்தோறும் அடியேனுடன் கூடவே வந்து பணியாற்றியிருக்கிறாள். அப்போதெல்லாம் அவள் பல்கலைக் கழகத்திற்கு ஒன்பது கஜம் மடிசார் புடவையுடனே வருவதைப் பார்த்துப் பலர் வியப்பை அடைந்திருக்கிறார்கள். பல்கலைக் கழகங்களில் நடைபெற்ற பல கருத்தரங்குகளில் மிகச் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளை வழங்கியிருக்கிறாள். தற்போது அடியேனை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு தஞ்சை சாஸ்த்ரா பல்கலைக் கழகம் நடத்தி வருகின்ற எம்.ஏ. பட்டப்படிப்பிலும் அடியேனுடன் கூட அவள் பாடங்களை நடத்தி வருகிறாள். அவள் நடத்திய வகுப்புக்கள் இணையதளத்திலும் பதிவேற்றப்பட்டுள்ளன. அவற்றைக் கேட்டு பல்லாயிரக் கணக்கானோர் பாராட்டியுள்ளனர். அதையும் தவிர பிற்பகல் வேளைகளில் இணையதளம் மூலமாகப் பலருக்கும் திவ்யப்ரபந்தப் பாசுரங்களையும் ரகசிய நூல்களையும் பொருள் விளக்கங்களுடன் கற்பித்து வருகிறாள். அவ்வப்போது சில உபந்யாஸங்களும் செய்து வருகிறாள்.

அடியேன் நடத்தி வருகின்ற கீதாசார்யன் பத்திரிகையிலும் அவள் பல உதவிகளைச் செய்து வருகிறாள். கட்டுரைகளை தட்டச்சு செய்வது, புரூப் பார்த்து திருத்தங்கள் செய்வது போன்ற பல உதவிகளைச் செய்து வருகிறாள். கீதாசார்யன் பத்திரிகைக்காகவே ‘பேஜ் மேக்கர்’ என்ற ப்ரோக்ராமை கற்றுக் கொண்டு அதிலேயே இப்பணிகளைச் செய்து வருகிறாள். தவிரவும் சந்தாதாரர்களுடைய விலாசங்களைப் பதிவேற்றுவது, மாறுதல்களைக் குறித்துக் கொள்வது போன்ற பல பணிகளை செய்து வருகிறாள். ஸம்ப்ரதாய விஷயங்களைக் குழந்தைகளுக்கும் எடுத்துச் சொல்வதுபோல் உரையாடல் நடையில் தொடர் கட்டுரைகளும் எழுதி வருகிறாள். அவை தொகுக்கப்பட்டு தற்போது தனி நூல்களாக (ஸ்ரீவசனபூஷணம் 2 பகுதிகள், முமுக்ஷுப்படி, ஆழ்வார்கள் கதைகள், ரகசிய நூல்கள், துழாய் சூடி ஆகிய புத்தகங்களாக) வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த முப்பத்தைந்து வருடங்களாக அடியேன் உள்ளூரிலோ அல்லது வெளியூரிலோ உபந்யாஸங்கள் செய்தால் அவை அனைத்திற்கும் அவள் கூடவே வந்திருந்து உபந்யாஸங்களை ஆர்வத்துடன் கேட்பாள். “போனமுறை இந்த விஷயத்தைச் சொன்னீர்கள். இந்த முறை அதனைச் சொல்லவில்லை; இன்று புதிதாக இந்த விஷயத்தைச் சொன்னீர்கள்” என்று அனைத்தையும் நினைவில் கொண்டு சொல்லுவாள்.

இவை அத்தனையும் குடும்பப் பணிகளுக்கு இடையே அவள் செய்தது குறிப்பிடத் தக்கது. விவாஹம் செய்து கொண்ட நாள் முதல் (இன்றுவரை) தளிகை செய்வது முதல் அனைத்துக் குடும்பக் காரியங்களையும் ஒருநாள்கூட விடாமல் செய்து கொண்டே படிப்படியாகத் தன்னுடைய ஸம்ப்ரதாய ஞானத்தை வளர்த்துக் கொள்கின்ற செயலையும் செய்து, அடியேன் செய்து வருகின்ற பணிகள் அனைத்திலும் உதவி வருகிறாள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வளவு வளர்ச்சிக்கும் காரணம் அடியேன் கொடுக்கின்ற ஆதரவுதான் என்று பெருந்தன்மையுடன் அனைவரிடம் கூறிவிடுவாள்.

இவ்வளவு செயல்கள் செய்து வருகின்றபோதும் ஆசார விஷயங்கள் எவற்றையும் அவள் குறைத்துக் கொண்டதே இல்லை. இந்த விஷயத்தில் வார்த்தாமாலை என்ற நூலில்

கூறப்பட்டுள்ள கூரத்தாண்டாள் பற்றிய ஓர் ஐதிஹ்யம் நினைவுக்கு வருகிறது. ஒருமுறை கூரத்தாழ்வானும் அவருடைய மனைவியான ஆண்டாளும் திருவரங்கத்திலிருந்து மற்றொரு ஊருக்குச் சென்று திரும்பும்போது வழியில் உணவு உட்கொள்வதற்குத் தகுதியான இடம் கிடைக்காமையினால் பட்டினியாக வந்து கொண்டிருந்தார்கள். வழியில் ஒரு உஞ்சவ்ருத்தி செய்து உண்பவரான ஒருவருடைய வீட்டு வாசல் திண்ணையில் அமர்ந்து கூரத்தாழ்வான் தாம் கொண்டுவந்திருந்த கட்டுச் சாதத்தை உண்டு விட்டு, ஆண்டாளையும் அழைத்து உண்ணச் சொன்னார். அப்போது ஆண்டாள், ‘‘இந்த வீட்டின் சொந்தக்காரருடைய உருவத்தையும் பெயரையும் கொண்டு அவரை வைஷ்ணவராக நிச்சயித்து அமுது செய்து விட்டீர். ஆனால் அவர் பகவானிடத்தில் ஊன்றியிருப்பவரா அல்லது வேறுபயன்களில் ஊன்றியிருப்பவரா என்று தெரியாமல் அவருடைய இல்லத்தில் நான் உண்ண மாட்டேன்’’ என்று கூறினாள். இதைக் கேட்ட ஆழ்வான், ஆண்டாளின் உறுதியைக் கண்டு மிகவும் வியந்து, ‘‘இதை ஆராயாமலே நான் அவருடைய இல்லத்தில் அமர்ந்து உண்டுவிட்டேன். ஆனால் அவர் எப்படிப்பட்டவர் என்று தெரியாமல் உண்ணமாட்டேன் என்று கூறிய உமக்கு உள்ள இதேபோன்ற உறுதியை எனக்கும் பெருமாள் தந்தருளவேண்டும்’’ என்று பெருமாளை வேண்டிக் கொண்டார்.

அடியேனுடைய குமாரன் சிரஞ்சீவி மதுசூதனனும் அடியேனிடமே திவ்யப்ரபந்தங்களை சந்தை சொல்லிக் கற்றுக் கொண்டும், உபயுக்தமான வேதபாகங்களை அத்யயனம் செய்தும், அடியேனிடமே பூர்த்தியாக பகவத்விஷய காலக்ஷேபத்தைக் கேட்டும், திருக்கோயில் கோஷ்டிகளில் அந்வயித்தும், அனைவரும் பாராட்டும் வகையில் உபந்யாஸங்கள் செய்தும் வருகிறான். ஸம்ப்ரதாய விஷயமான கட்டுரைகளையும் எழுதி வருகிறான்.

நம்மாழ்வார் ‘‘நல்ல பதத்தால் மனைவாழ்வார் கொண்டபெண்டிர் மக்களே’’ என்று அருளிச்செய்தது பகவத்பாகவதாசார்ய கடாக்ஷங்களால் அடியேன் விஷயத்தில் நன்கு பலித்துள்ளது என்றே அடியேன் அனுஸந்தித்து நிற்கின்றேன்.

